# “தேவனே, எங்களுக்கு நடத்துனர்களைத் தாரும்!”

## [2 சாமுவேல் 2–6; 23; 1 நாளாகமம் 11–14]

*“தேவனே, எங்களுக்கு நடத்துனர்களைத் தாரும்!” என்பதே நமது நாட்களின் கதறுதலாக உள்ளது. நாம் அரசைப் பற்றியோ, இல்லத்தைப் பற்றியோ அல்லது சபையைப் பற்றியோ, எதைப்பற்றிப் பேசினாலும், கதறுதல் என்பது ஒரே மாதிரியானதாகவே உள்ளது. ஒரு நாடு என்ற வகையில் நாம் எதிர்கொள்ள வேண்டிய அறைகூவல்களைப் பற்றி நாம் பேசும்போது, “நேர்மைமிக்க மனிதர்கள் எங்கே? உண்மையான நடத்துனர் கள் எங்கே?” என்று கேட்கின்றோம். இன்றைய நாட்களின் இல்லங்களின் பிரச்சனைகள் பற்றிப் பெருந்துன்பம் அடையும்பொழுது, “இன்றைய நாட்களின் மனிதர்கள் இல்லத்தை வழிநடத்திச் செல்லும் பொறுப்பை விசேஷமாக, ஆவிக்குரிய விஷயங்களில் வழிநடத்திச் செல்லும் பொறுப்பை மேற்கொள்வதில்லை” என்ற நாம் முடிவு செய்கின்றோம். கர்த்தருடைய சபை எதிர்கொள்ளுகின்ற பிரச்சனைகளைப்பற்றிப் பேசுகின்ற பொழுது, நாம் “தேவன் விரும்பிய வகையிலான நடத்துனர்கள் நமக்கு இருந்திருந் தால், அவர்கள் இந்த விஷயங்களைக் கையாண்டிருக்க முடியும், கையாளுவார்கள்'' என்று எந்த விதமான மாற்றமும் இன்றி நாம் தீர்மானிக்கின்றோம்.*

*இந்தப் பிரச்சனைகள் நமது நாட்டில் மட்டும் அல்ல, ஆனால் உலகம் முழுவதிலும் நிலவுகின்றன. மிக அதிகமாகப் பயணம் செய்கின்றவர்களை நாம் காண்கின்றபோது, கலந்துரையாடப்படுவது எந்த நாட்டைப் பற்றியதாயிருந்தாலும், “நல்ல நடத்துவத்துவம் என்பதே மிக அவசியமான தேவையாக உள்ளது” என்பதே முடிவாக உள்ளது. “தேவனே, எங்களுக்கு நடத்துனர்களைத் தாரும்!” என்பது உலகளாவிய கதறுதலாக உள்ளது.*

*நடத்துவத்திற்கான கதறுதல் என்பது புதியதோ அல்லது இந்தக் காலத்திற்கே மட்டும் உரியதோ அல்ல. தேவனால் அங்கிகரிக்கப்பட்ட மற்றும் தேவனைக் கனப்படுத்துகின்ற நடத்துவத்திற்கான குறைவுபடுதல் என்பது காலங்களினூடே இருந்துள்ளது. குறிப்பாக, இது சவுல் ராஜா இறந்து தாவீது முடிசூட்ட (ப்பட்ட) ராஜாவாயிருந்த வேளையில் உண்மையாக இருந்தது. முந்திய பாடத்தில் நாம், சவுல் பெலிஸ்தர் களுடனான யுத்தத்தில் மரணம் அடைந்தார் என்றும், இது தாவீதுக்கு அரியணை ஏறும் வாய்ப்பைத் திறந்து விட்டிருந்தது என்றும் கண்டோம். இஸ்ரவேல் நாட்டின்மீது தோல்வி என்பதின் பேரழிவுக்குட்படுத்தும்*

*விளைவு குறித்து நாம் காணவில்லை.*

*பெலிஸ்தருடனான அந்த மிக மோசமான யுத்தத்திற்கு முன்பே கூட, இஸ்ரவேல் நாடானது கல(க்)கம் நிறைந்த நாடாயிருந்தது. நாற்பது ஆண்டுகள் காலமாக நடைபெற்ற, சவுலின் பொறுப்பற்ற மற்றும் தவறான ஆளுகையானது நாட்டை அரசியல் ரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும் மற்றும் ஆவிக்குரிய வகையிலும் வலுவிழக்கச் செய்திருந்தது. சவுல் தமது சொந்த இனத்தின் (கோத்திரத்தின் மக்கள்) மீது கொண்டிருந்த பட்ச பாதமான பிரியமானது நாட்டைத் துண்டாக்கி இருந்தது. அவர் பித்தம் கொண்டவர் போலத் தாவீதைத் துரத்திக் கொண்டிருந்ததில், நாட்டின் அக்கறைக்குரிய விஷயங்களைப் புறக்கணித்து விட்டார். அவர் ஆசாரியர் களைக் கொல்லுவித்து, பிரதான ஆசாரியர் தம் பாதுகாப்புக்காகத் தாவீதி டத்தில் ஓடிச் செல்லும்படி நிர்ப்பந்தித்திருந்தார். இவை எல்லாவற்றிற்கும் மேலாக, இஸ்ரவேலின் படை பெலிஸ்தர்களால் மிகவும் பலமாகத் தோற்கடிக்கப்பட்டிருந்தது, சவுலும் அவர் மகனும் கொல்லப்பட்டிருந் தார்கள். 1 சாமுவேல் 31:7 வசனம், இந்தத் தோல்வியின் விளைவு பற்றிக் கூறுகின்றது:*

> *இஸ்ரவேலர் முறிந்தோடினார்கள் என்றும், சவுலும் அவன் குமாரரும் செத்துப் போனார்கள் என்றும், பள்ளத்தாக்குக்கு இப்பாலும், யோர்தானுக்கு இப்பாலும் இருந்த இஸ்ரவேலர் கண்டபோது, அவர்கள் பட்டணங்களை விட்டு ஓடிப்போனார்கள்; அப்பொழுது பெலிஸ்தர் வந்து, அவைகளிலே குடியிருந்தார்கள்.*

*அந்நியர்கள் நமது நாட்டின் மீது ஆதிக்கம் செலுத்தியிருந்த வேளைகளைப் பற்றி நினைத்துப் பாருங்கள். அவர்கள் நமது மக்களை அடக்கி ஒடுக்கி, நமது அந்தாளைய தலைவர்களைச் சிறையில் அடைத்துப் பலவாறு நம் முன்னோர்களைத் துன்புறுத்தினார்கள். ஆனால் அமெரிக்கர் களுக்கு இவ்விதமான சூழ்நிலையைப் பற்றி நினைத்துப் பார்த்தல் என்பது மிகவும் கடினமானதாக இருக்கக் கூடும். ஒருவேளை, ஒரு அயல் நாட்டினர் வந்து, நமது படைகளைத் தோல்வியடையச் செய்துவிட்டு, நமது அதிபரை யும் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மற்ற தலைவர்களையும் கொன்று விட்டு, நாட்டை எடுத்துக் கொள்கின்றார்கள் என்று வைத்துக் கொள்வோம். இஸ்ரவேல் நாட்டில் அவர்களின் படைதோற்கடிக்கப்பட்டு, சவுல் கொல்லப்பட்ட பொழுது அப்படிப்பட்ட ஒரு சூழ்நிலைதான் நிலவிற்று. W. பிலிப் கெல்லர் என்பவர் இஸ்ரவேலரின் பரிதாப நிலை பற்றிப் பின்வருமாறு எழுதினார்:*

> *நாடு முழுவதும் ... விரோதியான பெலிஸ்தரின் இரும்புப் பாதங்களின் கீழ் அடக்கப்பட்டு வீழ்ந்து கிடந்தது. இரக்கம் இன்றி ஊடுருவிய வர்கள் இப்பொழுது மிகவும் நேசிக்கப்படத் தக்க நகரங்கள் பலவற்றைப் பிடித்து அவற்றில் குடியிருந்தார்கள். அவர்களின் வல்லமையும் கட்டுப்பாடும் சவுலினால் முன்பு ஆளப்பட்டிருந்த எல்லைப் பகுதிகளின் பெரும்பான்மையானவற்றை மேற்கொண்*

டிருந்தன. எனவே, இப்பொழுது இஸ்ரவேலர்கள் யுத்தத்தினால் கிழிக்கப்பட்டு சண்டையினால் துவைக்கப்பட்ட மக்களாகத் துன்புற்றார்கள்.[1]

நடத்துவத்திற்காக ஒரு நாடு கதறியிருக்கும் என்றால், அது தாவீது அரியணைக்கு வந்தபோதிருந்த இஸ்ரவேல் நாடாகவே இருக்கும்.

இந்தப் பாடம், இராஜா என்ற வகையில் தாவீதுக்கு இருந்த தொடக்க கால அறைகூவல்களைப் பற்றியதாக உள்ளது. 2 சாமுவேல் 2-6; 23 ஆகியவை நமது வேதபாடப் பகுதிகளாகவும், அவற்றிற்குத் துணைப் பாடமாக 1 நாளாகமம் 11-14ம் இருக்கும். ஈசாயின் மகன் தமக்கு முன்பாக இருந்த அறைகூவல்களைத் தேவனுடைய உதவியினால் எவ்வாறு சந்தித்தார் என்பதைக் காண்பதினால், ஒருவேளை நாம் இன்றைய நாட்களில் மிகவும் அவசியமாகத் தேவைப்படுகின்ற நடத்துவத்துவம் பற்றிச் சிலவற்றைக் கற்றுக் கொள்ளக் கூடும்.

## ஞானமுள்ள நடத்துனர்கள் பண்புள்ள மனிதர்களாய் இருக்கின்றார்கள் (2 சாமுவேல் 2:1-7)

இஸ்ரவேலுக்கு நடத்துவத்துவம் தேவைப்பட்டது, ஆனால் அவர்களுக்கு நடத்துனர் எவரும் மட்டும் தேவை என்ற நிலையில் அவர்கள் இருக்கவில்லை. கிழிக்கப்பட்டு இரத்தம் சிந்திக் கொண்டிருந்த அந்த நாட்டிற்கு வன்மையான, உணர்வுப்பூர்வமான, தேவனுடைய மனிதர் ஒருவர் தேவைப்பட்டார். அப்படிப்பட்ட ஒரு மனிதரைத் தேவன், மேய்ப்பர்களின் வயல் வெளிகளிலும், அரண்மனையின் பகட்டுக்களிலும் மற்றும் வனாந்தரத்தின் எதிரான சூழ்நிலைகளிலும் முப்பது ஆண்டுகள் அளவாகத் தயார் செய்து கொண்டிருந்தார்.

தேவனுடைய நடத்துனர் என்பவர் நேர்மைமிக்கவராயிருக்க வேண்டும் என்பதே முதல் தேவையாய் இருந்தது. நடத்துவத்துவம் என்பது நடத்துனர் என்ன செய்கின்றார் என்பதைக் கொண்டு தொடங்குவதில்லை; அது, அவர் எப்படியிருக்கிறார் என்பதைக் கொண்டுதான் தொடங்கு கின்றது. 2 சாமுவேல் புத்தகத்தின் தொடக்கப் பத்திகளில், தாவீதின் பண்புகள் பற்றிய சில விஷயங்களை நாம் கண்டோம்: அவர் சவுலின் மரணத்திற்காகத் துக்கித்து, அவரைக் கனப்படுத்துவதற்காக அவர் மீது ஒரு புலம்பல் கவிதை எழுதியதை நாம் கண்டோம் (2 சாமு. 1:1-27); தாவீது சவுலுக்கெதிராக வன்ம உணர்வு கொண்டிராத அளவுக்குப் பெரியவரா யிருந்தார். தாவீது, தாம் யூதாவின் நகரங்கள் ஒன்றிற்குச் செல்லலாமா என்று கர்த்தரை விசாரித்தார் (2:1-3); அவர் தமக்கு வழிகாட்டத் தேவனைத் தேர்ந்து கொள்ளும் அளவுக்குப் பெரிய(மனமுள்ள)வராய் இருந்தார்.

தாவீதிடத்தில் தேவன் 2:1ல், எப்ரோனுக்குச் செல்லும்படி கூறினார். எப்ரோன் என்பது யூதாவின் நகரங்களிலேயே தனிச்சிறப்பு வாய்ந்ததா யிருந்தது. அவ்விடத்தில்தான் ஆபிரகாம் நிலம் ஒன்றை வாங்கி தமது அன்பு

மனைவியை அடக்கம் செய்திருந்தார். யோசுவாவின் படையானது நாட்டைக் கைப்பற்றியபோது, காலேப் எப்ரோனைத் தமக்குச் சுதந்திரமாகக் கொடுக்க வேண்டும் என்று உரிமைகோரி இருந்தார்.

இப்போது தாவீது முப்பது வயதுடையவராக எப்ரோனில் முதல் முறையாக இராஜா என்று அங்கீகரிக்கப்பட்டார். "அப்பொழுது யூதாவின் மனுஷர் வந்து, அங்கே தாவீதை யூதா வம்சத்தாரின்மேல் ராஜாவாக[2] அபிஷேகம் பண்ணினார்கள்" (2:4அ). யூதா வம்சத்தைச் சேர்ந்த நடத்துனர்கள் மட்டுமே தாவீதை ராஜாவாக ஒப்புக் கொண்டார்கள் என்பதைக் கவனியுங்கள். அடுத்த வந்த ஏழரை ஆண்டுகள் அளவாகத் தாவீது - யூதாவின் வீடு என்ற - ஒரே ஒரு கோத்திரத்தை மட்டுமே ஆண்டார்.

தாவீது முடிசூட்டப்பட்ட உடனே, அவர் தம் பண்பின் மீதான சோதனை ஒன்றைப் பெற்றார். புது ராஜாவிடத்தில் யூதாவின் மனிதர்கள், "கீலேயாத் தேசத்து யாபேசின் மனுஷர் சவுலை அடக்கம் பண்ணினவர்கள்" (2:4ஆ) என்று கூறினார்கள்.

பெலிஸ்தர்கள் சவுல் மற்றும் அவர் மகன்களின் உடல்களைக் கண்டு பிடித்தபோது, அவர்களின் தலைகளை வெட்டி எடுத்து விட்டு, அவர்களின் உடல்களைப் பெத்சானின் அலங்கத்தில் தூக்கிப் போட்டிருந்தார்கள். பெத்சான் என்பது பலஸ்தீனத்தின் வடக்குமத்திய பகுதியில் இருந்தது. பெலிஸ்தர்கள் தங்கள் வெற்றியை, இஸ்ரவேலின் எல்லைகளின் மிகவும் உட்பகுதிகளில் சென்று ஆர்ப்பரித்துக் கொண்டாடினார்கள். இந்த அக்கிரமச் செயலின் செய்தி, பென்யமீன் கோத்திரத்துடனும் சவுலுடனும் நெருங்கிய பிணைப்புக் கொண்டிருந்த கீலேயாத்-யாபேஸ் என்ற புறஜாதியார் நகரத்தை எட்டியது.[3] கீலேயாத் யாபேசில் இருந்த மனிதர்கள் தங்கள் தனிப்பட்ட இடர்ப்பாட்டின் பேரில், இருள் மூடிய வேளையில் பெத்சான் நோக்கி அணிவகுத்துச் சென்று, உடல்களைச் சுவற்றிலிருந்து அகற்றி, அவற்றை கீலேயாத் யாபேசுக்குக் கொண்டு சென்று அவற்றிற்கு மதிப்புள்ள வகையில் அடக்கச் சடங்கை நிறைவேற்றினர்.[4]

இந்தத் தகவல் கிடைத்தபோது, தாவீது எவ்வாறு அதற்கு பதில்செயல் செய்தார்? அதை அவர் கண்டுகொள்ளாது விட்டுவிட வேண்டுமா அல்லது அதற்குப் பதில் தர வேண்டுமா? அதற்கு அவர் பதில் தந்தால், அது எவ்விதமான பதிலாக இருக்க வேண்டும்? கீலேயாத் யாபேசின் மனிதர்கள் சவுலின் மிகவும் வைராக்கியமான நண்பர்களாக இருந்தார்கள் என்பதை நினைவில் வையுங்கள். நட்புறவுக்கரம் நீட்டுதல் என்பதே தாவீதின் பதில்செயலாக இருந்தது. இஸ்ரவேலுக்குக் குணமளிக்கும் என்றால், கடந்த காலம் புதைக்கப்பட வேண்டும் என்பதைத் தாவீது அறிந்தார்; தாம் தேவனால் அபிஷேகம் பண்ணப்பட்டவர் என்ற வகையில் தாமே அதைச் செய்ய வேண்டும் என்பதையும் அவர் அறிந்தார். கீலேயாத்தின் யாபேசில் இருந்தவர்கள் செய்த வீரமும் பரிவிரக்கமும் மிகுந்த செயலுக்காகப் பாராட்டுதல் தெரிவிக்கும்படி செய்தியாளர்களை அங்கு அனுப்பி வைத்தல் என்பதுதான் அவர் (தாவீது) ராஜாவானதும் செய்த முதல் செயலாயிருந்தது.

தாவீதின் ஆட்சிக்காலம் முழுவதிலும் நாம் தொடர்ந்து காண்கையில், அவரது பெருந்தன்மையான ஆவிக்கு மற்ற எடுத்துக்காட்டுகளையும்,

*அத்துடன் கூடுதலாக, அவர் "தமது வாக்குறுதிகளை நிறைவேற்றிய நடவடிக்கை" யின் எடுத்துக்காட்டுகளையும் நாம் காண்போம்.[5] இவ்விதமான நேர்மைப்பண்பு கொண்ட நடத்துனர்கள் நமக்குத் தேவை!*

## ஞானமுள்ள நடத்துனர்கள் ஒருமைப்பாடு குறித்து அக்கறை கொள்கின்றார்கள்
## *(2 சாமுவேல் 2:8-3:1, 6-13, 17-21)*

*ஒரு நடத்துனர் தம்மிடம் கேட்கப்படுவது பற்றித் தெளிவான கண்ணோக்குடையவராயிருத்தல் அவசியமானதாகும். அவர் தம் இலக்குகளைச் சாதிப்பதற்கு முன்னுரிமைகளைக் கணக்கிட வேண்டும். பின் அவர் தமது இலக்குகளை அடையும் வரை அப்பணிப்பொறுப்புகளில் உறுதியாய் நிலைத்திருக்க வேண்டும்.*

*கீலேயாத்தின் யாபேசில் இருந்த மனிதர்களைத் தாவீது ஆசீர்வதித்த செயலானது, பழைய காயங்கள் ஆற்றப்பட வேண்டும் என்பதையும் மக்களை ஒன்றிணைக்க வேண்டும் என்பதையும் தாவீது தமது முதல் இலக்குகளில் ஒன்றாகக் கண்டார் என்பதைத் தெளிவாக்கிற்று. அவர்கள் ஒன்றிணையாத வரையிலும் தங்களின் பொது விரோதியான பெலிஸ்தர் களை எதிர்த்து நிற்க இயலாதிருந்தது. மேலும், அவர்களுக்குள் பிரிவினை இருக்கும் வரையிலும் தேவனுக்கும் அவர்களுக்கும் இடையில் ஒரு தடைச்சுவர் இருந்து கொண்டிருக்கும் (1 யோவா. 4:20). மேலும், அவர்கள் ஒன்றாயிராதவரையிலும் வளர்ந்து வளம் பெற முடியாது. தாவீதினால் பாடப்பட்ட மாபெரும் பாடல் ஒன்று, "இதோ சகோதரர் ஒருமித்து வாசம் பண்ணுகிறது எத்தனை நன்மையும் எத்தனை இன்பமுமானது!" (சங். 133:1) என்று தொடங்குகின்றது. தாவீதின் பணித்திட்டங்களில் ஒருமைப்பாடு என்பது முன்னுரிமை பெற்ற விஷயமாயிருந்தது, தேவனுடைய நடத்துனர்கள் யாவரிடமும் இதே போன்றது காணப்பட வேண்டும்.[6]*

*இது, ஒருமைப்பாட்டிற்கான சாலையானது மென்மையும், நிழலா னதும், இறங்குமுகமானதாயும் இருக்கும் என்று அர்த்தப்படுத்துவது இல்லை. எல்லாரும் ஒருமைப்பாட்டை விரும்பி விடுவதில்லை. பெரும் பான்மையானவர்கள் தாங்கள் ஒருமைப்பாட்டை விரும்புவதாகக் கூறுகின்றார்கள், நான் இளைஞனாயிருந்த போது இதுவே விஷயம் என்று நான் நம்பியிருந்தேன். இருப்பினும், பலர் பிரிவினையை விரும்புவதையும், இன்னும் சிலர் தங்கள் சொந்த நோக்கங்களுக்காகப் பிரிவினையைப் பேணி வளர்ப்பதையும் கண்டறிந்தேன்.*

*ஒருமைப்பாட்டில் தாவீதுக்கு அடிப்படையான தடையாக இருந்தவர் அப்னேர் ஆவார். சவுலின் படைத் தளபதியாய் இருந்த அவர், (1 சாமு. 17:55; 26:5) தோற்கடிக்கப்பட்டு சிதறியிருந்த இஸ்ரவேலர்களுக்கு அப்னேர் ஒரு ஒன்றுகூட்டும் குறியாயிருந்தார். தொடக்கத்தில், வடக்குப் பகுதியில் தாவீதை ராஜாவாக்க வேண்டும் (2 சாமு. 3:17ஐக் கவனிக்கவும்) என்று அடித்தட்டுப் பகுதி மக்களால் ஒரு இயக்கம் மேற்கொள்ளப்பட்டது. அந்த*

*வேளையில் அப்னேர் தாவீதின் பின்னால் வடக்கு இஸ்ரவேலின் ஆதரவு முழுவதையும் சுலபமாகக் கூட்டியிருக்க முடியும், ஆயினும் அப்னேர் தமது சொந்தப் பணித்திட்டங்களைக் கொண்டிருந்தார்.*

*அப்னேர் ஆழ்ந்தறியப்படுவதற்குக் கடினமான ஒரு மனிதராயிருந்தார். அவர் பல வழிகளில் பாராட்டுதற்குரிய மனிதராயிருந்தார். அவர் வீரமான வராக, படைத்தலைவர் என்ற வகையில் வல்லவராயிருந்தார், மற்றும் தமது எஜமானர் (சவுல்) மீது பற்றியெறியும் பற்றுறுதி கொண்டு விளங்கினார். அவர் மரித்தபோது, தாவீது அவரை "இஸ்ரவேலில் பிரபுவும் பெரிய மனுஷனும் ..." (2 சாமு. 3:38) என்று அழைத்தார்.[7] மேலும், தேவன் சவுலை ராஜாவாயிராதபடிப் புறக்கணித்து, அடுத்த ராஜாவாகத் தாவீதைத் தேர்ந்து கொண்டிருந்ததையும் அப்னேர் அறிந்திருந்தார்.[8]*

*என்றால், அப்னேர் ஏன் தாவீதை ஆதரிக்கவில்லை? ஒருவேளை அது சவுலைப் பற்றிய நினைவுக்கு தவறாக வழிநடத்தப்பட்ட பற்றுறுதியினால் அவ்வாறு இருந்திருக்கலாம். ஒருவேளை (பலர் நினைக்கிறபடி) அப்னேர் சுயநலமான பேராவல்களினால் நிறைந்தவராயிருந்தார். 3:6ல் "சவுலின் குடும்பத்துக்கும் தாவீதின் குடும்பத்துக்கும் யுத்தம் நடந்து வருகிற போது, அப்னேர் சவுலின் குடும்பத்திலே பலத்தவனானான்" என்று குறிப்பிடப் பட்டுள்ளது. அப்னேர் சவுலுக்கு உறவினராயிருந்தார்,[9] ஒருவேளை அவர் தாமே அரியணையில் அமரலாம் என்று நம்பிக்கையாய் இருந்திருக்கலாம்.*

*அப்னேரின் காரணம் எதுவாயிருந்தாலும், அவர் யூதாவின் படைகளுடன் தீவிரமான யுத்தத்தைத் தூண்டிவிட்ட வகையில், இஸ்ரவேலில் இரத்தம் பெருக்கெடுத்து ஓடச் செய்த ஒரு உள்நாட்டு யுத்தத்தின் பொறுப்பாளியானார். 2:12-32ல், அந்த யுத்தங்களில் ஒன்றைப்பற்றி நாம் வாசிக்கின்றோம். அப்னேரும் அவரது மனிதர்களும் எருசலேமிலிருந்த வடக்குமுகமாக ஒரு சில மைல்கள் தள்ளியிருந்த கிபியோனின் அழகிய குளத்தண்டையில் யோவாப்பையும்[10] அவருடைய படையினரையும் சந்தித்தார்கள். யோவாப்புடன் அவரது இரு சகோதரர்களான அபிசாயும்[11] ஆசகேலும் இருந்தார்கள்; அவர்கள் யாவரும் தாவீதின் மைத்துனர்களாய் இருந்தார்கள்.[12] எல்லாரும் யுத்தம் பண்ணுவதற்குப் பதிலாக, அப்னேர் தம் மனிதர்களில் பன்னிரெண்டு பேர் யோவாபின் மனிதர்களில் பன்னிரெண்டு பேருடன் சிலம்பம் பண்ணட்டும் என்று யோசனை தெரிவித்தார் - இது தாவீதுக்கும் கோலியாத்துக்கும் இடையில் நடந்த போட்டி போன்றதாயிருந்தது. இருப்பினும் விரைவிலேயே முழுமையான யுத்தம் வெடித்தது. யோவாபும் அவர் படையினரும் தீர்மானமான வெற்றியைப் பெற்றார்கள்.[13]*

*அப்னேரும் அவரது படையினரும் (தப்பி) ஓடுகையில், யோவாபின் சகோதரரான ஆசகேல் - இவர் ஒரு மிகச் சிறந்த ஓட்ட வீரரும், கலைமானைப் போல் ஓடக் கூடியவருமாவார் - அப்னேரைத் துரத்திச் சென்றார். (யுத்தத்தில்) பழம்பெரும் நிபுணரான அப்னேர் அந்த இளைஞனைக் கொல்ல விரும்பாமல், அவரை நின்றுவிடும்படி கெஞ்சினார் (2:22), ஆனால் அவர் நிற்கவில்லை. கடைசியில் அப்னேர் தமது ஈட்டியின் பின்புற அலகை ஆசகேலின் வயிற்றில் பாய்ச்சினார், ஆசகேல் (அந்த*

ஈட்டியினால்) துளைக்கப்பட்டார் (2:23).[14] இந்தத் துன்பகரமான காட்சி துரத்திச் செல்லுதலின் வேகத்தைக் குறைத்து, அப்னேருக்கு (தம் மனிதர்களை) மீண்டும் குழுமச் செய்வதற்கு வாய்ப்பு ஒன்றை அளித்தது. யோவாப்பும் அவர் மனிதர்களும் அப்னேரைப் பிடிக்க வந்த வேளையில், அவரும் அவர் மனிதர்களும் வியூகமான நிலையில் பதுங்கி நின்றார்கள். அப்னேர், இனியும் இரத்தம் சிந்த வேண்டாம் என்று யோவாபை இணங்கச்செய்து, பின்பு இருதரப்பாரும் இல்லம் திரும்பினார்கள்.

யூதாவை வடக்குக் கோத்திரங்களின் ஆதிக்கத்தின் கீழ் கொண்டு வர வேண்டும் என்ற அப்னேரின் தந்திரமான செயல் தோல்வியுற்றது, ஏனென்றால் கர்த்தர் தாவீதுடன் கூட இருந்தார். 3:1ல் நாம், "சவுலின் குடும்பத்துக்கும் தாவீதின் குடும்பத்துக்கும் நெடுநாள் யுத்தம் நடந்தது, தாவீது வர வரப் பலத்தான்; சவுலின் குடும்பத்தாரோ வரவரப் பலவீனப் பட்டுப் போனார்கள்" என்று வாசிக்கின்றோம்.

ஐந்தரை ஆண்டுகளுக்குப் பின்பு, அப்னேர் ஒரு புது அணுகுமுறையை முயற்சி செய்தார்: அவர் வடக்கு கோத்திரங்களின் மீது ராஜாவாக சவுலின் மகன்களில் ஒருவரை நியமித்தார்.[15]

> சவுலின் படைத்தலைவனான நேரின் குமாரனாகிய அப்னேர் சவுலின் குமாரனாகிய இஸ்போசேத்தை மகனாயீமுக்கு[16] அழைத்துக் கொண்டுபோய் ... இஸ்ரவேலனைத்தின்மேலும், ராஜாவாக்கினான். சவுலின் குமாரனாகிய இஸ்போசேத் இஸ்ரவேலின்மேல் ராஜாவாகிற போது, நாற்பது வயதாயிருந்தான்; அவன் இரண்டு வருஷம் ராஜ்யபாரம் பண்ணினான் ... (2:8-10).

சவுலுக்கு இஸ்போசேத்[17] (அல்லது எஸ்பால்[18]) என்ற பெயர் கொண்ட ஒரு மகன் இருப்பதாக இவ்விடத்தில்தான் நாம் முதல் முதலாக வாசிக்கின்றோம். இவர் யுத்தத்தில் மரித்த சவுலின் மற்ற மூன்று மகன்களை விட இளையவராயிருந்தார் என்பது உறுதி.[19] இவர், கில்போவா மலையில் தமது தந்தையும் மூத்த சகோதரர்கள் மூவரும் கொல்லப்பட்டபோது எப்படியோ தப்பிக் கொண்டார். இஸ்போசேத் ஒரு பலவீனமான நபராக இருந்ததினால் (இ.வ. 2 சாமு. 3:11; 4:1) அநேகமாக யுத்தத்திற்குச் சென்றிருக்க மாட்டார்.

இஸ்போசேத் ஒரு பொம்மை அரசராக அரியணையில் இரண்டு ஆண்டுகள் அமர்ந்திருந்தார், அப்னேர்தான் உண்மையில் அதிகாரம் கொண்டிருந்தார். அது, தாவீதினால் நாட்டை ஒருக்காலும் ஒன்றிணைக்க இயலாத இக்கட்டான நிலைமையில் செல்லும்படியாக்கிற்று. ஆயினும் திடீரென்று, ஒரு எதிர்பாராத திருப்பம் ஏற்பட்டது. மனிதர்களின் விஷயங்களில் தேவனுடைய கரம் இங்கு மறுபடியும் காணப்படக்கூடும். ஒருநாள், இஸ்போசேத் தமது தந்தையின் மறுமனையாட்டியிடத்தில் அப்னேர் பிரவேசித்ததாக அப்னேரைக் குற்றப்படுத்தினார்.[20] அரசரின் மறுமனையாட்டிகளில் ஒருத்தியை உரிமைகோருதல் என்பது அந்தப்புறம் முழுமையும் உரிமைகோருதலாகவே இருக்கும், ஆகையால், அது அரியணையை உரிமைகோருதலாகவும் இருக்கும். இஸ்போசேத்,

*அப்னேரின் மீது சூழ்ச்சி செய்த குற்றம் சாட்டினார். அப்னேர் மிகவும் கோபம் அடைந்தார்.*

> *"உம்மைத் தாவீதின் கையில் ஒப்புக்கொடாமல், இந்நாள்மட்டும் உம்முடைய தகப்பனாகிய சவுலின் குடும்பத்துக்கும், ... தயவுசெய்கிற வனாகிய என்னை நீர் இன்று ஒரு ஸ்திரீயினிமித்தம் குற்றம் பிடிக்கிறதற்கு, நான் யூதாவுக்கு உட்கையான ஒரு நாய்த்தலையா? நான் ராஜ்யபாரத்தைச் சவுலின் குடும்பத்தை விட்டுத் தாண்டப் பண்ணி, தாவீதின் சிங்காசனத்தைத் தாண் துவக்கிப் பெயர்செபா மட்டுமுள்ள இஸ்ரவேலின்மேலும் ... நிலைநிறுத்தும்படிக்கு கர்த்தர் தாவீதுக்கு ஆணையிட்டபடியே, நான் அவனுக்குச் செய்யாமற் போனால், தேவன் அப்னேருக்கு அதற்குச் சரியாகவும் அதற்கு அதிகமாகவும் செய்யக்கடவர்" என்றான் (3:8-10).*

*வடக்கு பலஸ்தீனத்தில் தேய்ந்து கொண்டிருந்த நம்பிக்கைகளை உயிர்ப் பிக்கவும் சவுலின் மகனைச் சுற்றி மக்களைக் கூட்டி அணிதிரளச் செய்யவும் இஸ்போசேத்தை அரியணையில் அமர்த்தியதென்பது அப்னேரின் பகுதியில் ஒரு ஆழ்ந்த வெறுப்புக்கு உரிய இயக்கமாக இருந்திருக்கலாம். ஆயினும், இஸ்போசேத் அப்னேருக்கு எதிராகத் திரும்பியதாகக் காணப்பட்டபோது, அப்னேர் தம் முயற்சி வீணானதென்று நினைத்தார் என்பது உறுதி. அந்தப் பழைய வீரர், அந்த மோசமான சூழ்நிலையை மிகச் சிறந்த வகையில் பயன்படுத்திக்கொள்ளத் தீர்மானித்தார். அவர் தாவீதுக்குத் தமது ஆதரவை அளிப்பதாக அறிவிக்க அவரிடத்தில் செய்தியாளர்களை அனுப்பி வைத்தார் (2 சாமு. 3:12).*

*தாவீது எவ்வளவு ஆச்சரியப்பட்டிருப்பார் என்று உங்களால் கற்பனை செய்து பார்க்க இயலுமா? ஒவ்வொரு நாள் மாலை வேளையிலும் தேவனிடத்தில் தாவீது, "கர்த்தரே, சகோதரர் சகோதரரைக் கொல்லும் இந்த நிகழ்வானது எத்தனை நாட்கள் நடந்து கொண்டிருக்கும்?" என்று கதறியிருக்கலாம். பின்பு, காட்சியில் முடிவு இல்லாதபோது, கடைசியாக தாவீது எதிர்பார்க்கக் கூடாதவராகிய அப்னேரிடம் இருந்து, சமாதானத் திற்கான முன்மொழிதல் ஒன்று வந்தது. கர்த்தருடைய வழிகள் ஆச்சரிய மானவைகளாயிருக்கின்றன, அல்லவா? (நீதி. 16:7).*

*தாவீது முன்னெச்சரிக்கையான உற்சாகத்துடன் அப்னேரின் முன்மொழிதலுக்குப்[21] பதில் அளித்தார். அப்னேர் எப்ரோனில் இருந்த தாவீதின் தலைமையிடத்திற்கு வந்தார். ஆழ்ந்த வெறுப்பில் ஆண்டுகள் பல கடந்த பின்பு, அப்னேரும் தாவீதும் முகமுகமாய் மீண்டும் சந்திக்க வந்தபோது, அங்கு காற்று இறுக்கத்தினால் அடர்ந்து போயிருக்க வேண்டும். சமாதானத்தை விரும்பிய தாவீது, அந்த சூழ்நிலையை கிருபைமிக்க வகையில் கையாண்டார். அவர் அப்னேரையும் அவருடன் இருந்த மனிதர்களையும் ஒரு பெரிய விருந்து தயார் செய்விக்கப்பட்டிருந்த விருந்து அறைக்கு அழைத்துச் சென்றார்.[22] பேரம் பேசும் மேஜையைக் காட்டிலும் உணவு மேஜையின் மீது அதிகமான வேறுபாடுகள் தீர்த்து வைக்கப்பட முடியும் என்று ஞானமுள்ள தலைவர்கள் அறிந்திருந்தார்கள்.*

சமாதான மாநாடு நன்முறையில் நடந்தேறிற்று. கடைசியில், தாவீதிடம் அப்னேர், "நான் எழுந்துபோய், இஸ்ரவேலரை எல்லாம் உம்மோடே உடன்படிக்கை பண்ணும்படிக்கு ராஜாவாகிய என் ஆண்டவனிடத்தில் சேர்த்துக்கொண்டு வருகிறேன்; அதினாலே உம்முடைய ஆத்துமா அரசாள விரும்புகிற இடமெல்லாம் அரசாளுவீர்" என்று கூறினார் (3:21அ). அப்னேர், வடக்குக் கோத்திரங்கள் உடன்படச் செய்வதற்கு விரைவிலேயே புறப்பட்டுச் சென்றார். "அப்படியே தாவீது அப்னேரை அனுப்பிவிட்டான்; அவன் சமாதானத்தோடே போனான்" (3:21ஆ). பல ஆண்டுகள் கசப்பான உள்நாட்டுப் போருக்குப் பின்பு, ஒருமைப்பாடு கண்களில் தெரியத் தொடங்கிற்று.

அமெரிக்கா நாட்டில் உள்நாட்டுப் போர் மிகவும் தீவிரமாக நடைபெற்றுக் கொண்டிருந்தபோது, அதிபராயிருந்த ஆப்ரகாம் லிங்கன், அரசை ஒருமைப்படுத்துவதின் அவசியத்தை வலியுறுத்தி, இயேசுவின் கூற்றுக்களில் ஒன்றை மேற்கோள் காண்பித்தார்: "ஒரு ராஜ்யம் தனக்குதானே விரோதமாகப் பிரிந்திருந்தால், அந்த ராஜ்யம் நிலைநிற்க மாட்டாதே, ஒரு வீடு தனக்குத்தானே விரோதமாகப் பிரிந்திருந்தால், அந்த வீடு நிலைநிற்கமாட்டாதே" (மாற். 3:24, 25). ஒரு நாடு தனக்குள் பிரிவினையைச் சுமந்து நின்றால், அது தனக்குள் சுய அழிவின் விதைகளைக் கொண்டுள்ளது என்று தாவீதைப் போலவே லிங்கனும் அறிந்திருந்தார். இந்தக் கொள்கையானது நாடுகளுக்குப் போலவே சமுதாயங்களுக்கும் உண்மையானதாக உள்ளது. சமுதாயங்களுக்குப் போலவே சபைகளுக்கும் உண்மையாய் உள்ளது. மற்றும் சபைகளுக்குப் போலவே குடும்பங் களுக்கும் உண்மையானதாக உள்ளது. தேவனுடைய நடத்துனர்கள் - அரசியல் தலைவர்களோ, சபை நடத்துனர்களோ அல்லது குடும்பத் தலைவர்களோ யாராயிருப்பினும், அவர்கள் - ஒருமைப்பாட்டைத் தங்கள் உயர்வான முன்னுரிமையாகக் கொண்டிருக்க வேண்டும்.

## ஞானமுள்ள நடத்துனர்கள் நெருக்கடியான நிலைகளைக் கையாள முடியும் (2 சாமுவேல் 3:22-37)

இது ஒரு கற்பனைக் கதையாயிருந்தால், அப்னேர் ஒரு சில வாரங்கள் வடக்குக் கோத்திரத்தார் மத்தியில் பயணம் செய்த பின் அவர்களை, இஸ்ரவேல் தேசம் முழுமைக்கும் தாவீதை ராஜாவாய் முடிசூடிட்டும் படிக்குக் கொண்டுவந்து சேர்த்தார் என்று நான் கூறியிருப்பேன். ஆயினும் வாழ்வு என்பது கற்பனைக் கதையும் அல்ல - ஒருமைப்பாட்டிற்கான சாலை என்பது பழைய விரோதியுடன் ஒரு விருந்தை உண்பது போல மிகவும் எளிய காரியமும் அல்ல. எதிர்பாராத சாலைத்தடைகளும் திருப்பங்களும் எழுகின்றன; சில வேளைகளில் ஒருவர் தாம் வந்த வழியிலேயே திரும்பிச் சென்று இன்னொரு சாலையில் பயணம் மேற்கொள்ள வேண்டியதாக உள்ளது. நடத்துனர்கள் எதிர்பாராதவைகளை எதிர்பார்க்க வேண்டும்,

*அவர்கள் துரிதமான முடிவுகளை மேற்கொள்ளத் தயாராயிருக்க வேண்டும்.*

*2 சாமுவேல் 3ல் அடுத்துள்ள சில வசனங்கள், அப்னேர் தாவீதைக் காண வந்தவேளையில் எப்ரோனில் யோவாப் இல்லாதிருந்தார் என்பதைக் கூறுகின்றது; யோவாபும் அவருடைய மனிதர்களும் கொள்ளையிடுவதற்காக வெளியில் சென்றிருந்தார்கள். (யோவாப் அங்கிருந்தால் சமாதானப் பேச்சு வார்த்தை முறிந்து போகக் கூடும் என்று தாவீது யோவாப்பை வேண்டுமென்றே வெளியே அனுப்பியிருந்தாரா என்று ஒருவர் வியப்படைகின்றார்.) அப்னேர் சென்றபின் விரைவிலேயே யோவாப் திரும்பி வந்தார் என்பது உறுதி. தாவீது அப்னேருக்குச் "சிகப்புக் கம்பளம் விரித்து" வரவேற்று, அவரைச் சமாதானத்துடன் செல்ல அனுமதித்திருந்தார் என்பதை யோவாப் கேட்டபோது, அவர் முன்கோபம் கொண்டார். அவர் அரியணை இருந்த அறையினுள் மூர்க்கமாகப் பிரவேசித்து, அப்னேரின் நோக்கங்கள் கொடூரமானவை என்றும், ஒற்றராகவே அப்னேர் அங்கு வந்தார் என்றும் ராஜாவிடம் கூறினார். அப்னேர் வந்த தருணத்தைத் தாவீது அவரைப் பிடிக்க ஒரு வலையைப் போல் பயன்படுத்தியிருக்க வேண்டும் என்று யோவாப் மறைமுகமாக உணர்த்தினார்.*

*யோவாப் தாவீதின் அருகில் எப்பொழுதும் ஒரு முள்ளைப் போலவே இருந்தார் (2 சாமு. 18:5, 14; 1 இரா. 2:5, 6). ஒரு புறத்தில், அவர் ஒரு மிகச் சிறந்த யுத்த வீரராயிருந்தார், மனிதர்களுக்கு ஏவுதல் தந்த ஒரு பயமற்ற நடத்துனராயிருந்தார். தன் ராஜாவுக்காக மரிக்கவும் தயாராயிருந்தார். இன்னொரு புறத்தில் அவர் சுயநலமும், பழிவாங்கும் தன்மையும் அடிக்கடி கீழ்ப்படியாமையும், ஆவிக்குரிய வகையில் சொற்ப மதிப்பீடுகள் மட்டும் கொண்டவராகவும் இருந்தார் (2 சாமு. 10:12ல் ஒரு குறிப்பிடத்தக்க விதிவிலக்கு காணப்படுகின்றது). எல்லா நடத்துனர்களுமே தங்கள் யோவாபுகளைத் தங்களுக்குள் கொண்டுள்ளார்கள்: இத்தகைய குணமின்றி வாழ முடியாத அல்லது வாழ்ந்திராத இன்றியமையாத தனிநபர்கள். ஒரு நடத்துனர் என்ற வகையில் நீங்கள் வெற்றி பெறுதல் என்பது, உங்கள் யோவாபுகளை நீங்கள் எவ்வாறு கையாளுகின்றீர்கள் என்பதைச் சார்ந்ததாகும்.*

*ஒருமைப்பாடு காணப்படும் இடத்தை அடைவதற்கு ஏழு ஆண்டுகளுக்கும் மேற்பட்ட காலம் எடுத்துக் கொள்ளப்பட்டது. (ஆனால்) அவ்வாறு ஏற்படுத்தப்பட்டிருந்த படிப்படியான வளர்ச்சியை, யோவாப் ஒரு மணி நேரத்திற்கும் குறைவான கால அளவிலேயே, அழித்துப் போட்டார். யோவாப் தாவீதை விட்டு வெளியேறிச் சென்றபோது, ஒன்றிரண்டு மைல்கள் தூரமே சென்றிருந்த அப்னேரைத் தொடரும்படி செய்தியாளர்களை அனுப்பினார், அவர்கள் அப்னேரிடம், தாவீது மீண்டும் அவரைக் காண விரும்புவதாகக் கூறியிருப்பார்கள் என்பதில் சந்தேகம் இல்லை. அப்னேர், எதையும் சந்தேகிக்காமல் உடனே திரும்பினார். யோவாப் அவரைச் சந்தித்து "அவனோடே இரகசியமாய்ப் பேசப் போகிறவன் போல" (3:27) ஒரு பக்கமாய் அழைத்துக் கொண்டு சென்றார். அப்னேர் தாவீதின் செய்திக்காகக் காத்திருக்கையில், யோவாப் தமது ஆயுதத்தை அவர் வயிற்றினுள் ஆழமாய்க் குத்தினார், எனவே யோவாபின்*

*சகோதரர் இறந்ததுபோலவே அப்னேரும் இறந்தார்.[23]*

*முந்திய பாடம் ஒன்றில் நாம், "பழிவாங்குதலுக்காக இருதயம் கதறுகின்றபோது" ஒருவர் "அதன் விலையை எண்ணிப் பார்க்கும்படி" நிற்கவேண்டும் என்று ஆலோசனை கூறியிருந்தோம். யோவாப் பழி வாங்கியிருந்தார், ஆனால் அதன் விலை அளவு கடந்ததாக இருந்தது. இப்பொழுது சூழ்நிலையானது அப்னேரும் தாவீதும் சந்திக்கும் முன் இருந்ததைக்காட்டிலும் மிகவும் மோசமாகிவிட்டது. என்ன நடந்தது என்பதைத் தாவீது கேள்விப்பட்டபோது, அப்னேர் கொல்லப்படுவதற் காகவே எப்ரோனுக்கு வஞ்சகமாய் அழைக்கப்பட்டார் என்று ஒரு கதையானது விரைவிலேயே பரவும் என்று அறிந்தார். தாவீது நம்புதற் குரியவர் அல்ல என்று ஜனங்கள் சொல்லத் தொடங்கிவிடுவார்கள். வடக்கையும் தெற்கையும் ஒன்றிணைப்பதற்கிருந்த எந்த ஒரு சாத்தியக் கூறும், பழிவாங்குதலுக்காக[24] யோவாப் கொண்டிருந்த தேவபக்தியற்ற தாகமானது அழித்துப் போட்டதாகக் காணப்பட்டது.*

*இப்படிப்பட்ட வேளைகளில் உண்மையான நடத்துவத்துவம் வெளிப்படுத்தப்படுகின்றது. இந்தப் பேரழிவிற்குத் தாவீதின் பதில் செயலானது, அவர் கொண்டிருந்த தேவபக்தியுள்ள பண்புகளுக்காக மட்டுமின்றி, மிக அழிவுக்குரிய சூழ்நிலைகளில் அவர் உணர்வறிவுடன் செயல்படும் தன்மைக்காகவும் தேவன் அவரைத் தேர்ந்திருந்தார் என்பதைக் காண்பிக்கின்றது. துன்பத்தைத் தவிர்ப்பதற்குத் தாவீது என்ன செய்தார் என்பதைக் கவனியுங்கள்.*

*முதலாவது, அவர் உடனடியாகச் செயல்பட்டார். நெருக்கடியான வேளையில், காலம் என்பது இன்றியமையாததாக உள்ளது. நம்மில் பலர், விஷயம் சரியாகிவிடும் என்று நினைத்து செயல்படுவதைத் தள்ளிப் போடுகின்றோம், ஆனால் இது மிகவும் அரிதாகவே சரியாகிறது. உண்மை யான நடத்துனர்கள் தீர்மானத்துடன் உடனடியாகச் செயல்படுகின்றனர்.*

*இரண்டாவது, தாவீது உடனடியாக அந்தக் கோழைத்தனமான செயலில் தமக்கு எதுவும் தொடர்பு இல்லை என்று பலர் அறியக் கூறினார் (3:28). இது தன்னிலே மிகச் சிறியதாக அர்த்தமாகியிருக்கலாம், ஆனாலும் இது செய்யப்பட வேண்டியது அவசியமாயிருந்தது.*

*மூன்றாவது, அவர் (தாவீது), யோவாபின் செயலுக்காக அவரை வெளியரங்கமாகக் கண்டனம் செய்தார், அவரை (யோவாபை) படைப் பதவியிலிருந்து நீக்கி,[25] யோவாப் மீதும் அவர் வீட்டார் மீதும் ஒரு சாபத்தை வைத்தார். யோவாபுக்கு இன்னும் கடுமையான தண்டனை கொடுக்கப் படாதது ஏன் என்று நாம் வியப்படையலாம். யோவாபுக்கு மரண தண்டனை கொடுத்தல் என்பது தாவீதின் சுயதகுதி நிலைகளில் பிரிவினை ஏற்படுத்துவதாக இருந்திருக்கும்.[26] யோவாப் செய்தது சரியென்றே யூதாவில் பலர் நினைத்தார்கள் என்பதில் ஐயம் எதுவும் இல்லை. மேலும், அந்த நாட்களில் ஒரு சாபம் என்பது, "இலேசான தண்டனை" என்று கருதப் பட்டிராது. கடைசியில், தாவீது கடினமாய்க் கற்றுக் கொண்ட ஒரு பாடத்தை நடைமுறைப்படுத்தினார்: சில விஷயங்கள் தேவனுடைய கரங்களில் விடப்பட வேண்டியவைகளாக உள்ளன. "அந்தப் பொல்லாப்*

*பைச் செய்தவனுக்குக் கர்த்தர் அவன் பொல்லாப்புக்குத் தக்கதாய்ச் சரிக்கட்டுவாராக" (3:39ஆ).*

*நான்காவது, அவர் நாட்டளவில் ஒரு துக்கங்கொண்டாடுதலை அறிவித்து அப்னேரின் உடலை எப்ரோனில் முழு (அரசு) மரியாதையுடன் அடக்கம் செய்வித்தார். தாவீது தமது முதன்மை மனிதர்களை (அப்னேரின் உடலை வைத்திருந்த) பாடையின் பின்னாக நடக்கச்செய்து, தாம் அவர்களை நடத்திச் சென்றார். அவர்கள் இராஜரீக உடையிலோ அல்லது இராணுவ உடையிலோ அவ்வாறு செல்லவில்லை, மாறாக, எல்லாரும் இரட்டுடுத்த வேண்டும் என்று தாவீது ஆணையிட்டிருந்தார்[27] (யோவாப் கூட அப்னேரைக் கனப்படுத்துவதற்காக இரட்டுடுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்ளப்பட்டிருந்தார். இதை அவர் எவ்வளவாய் வெறுத்திருக்க வேண்டும்!) அந்த சவ அடக்க(ஊர்வல)த்தில் தாவீது, எளிய முரட்டு துணியை உடுத்தியவராக, முன்பு சவுலுக்கு இயற்றியது போல் இப்போது அப்னேருக்கும் ஒரு புலம்பல் பாடலை உச்சரித்துக் கொண்டே போனார். மீண்டும் ஒருமுறை, தாவீதின் கருணைமிக்க இருதயமும், சமாதானத் திற்கான விருப்பமும் முன்னணிக்கு வந்தன. "இன்றைய தினம் இஸ்ர வேலின் பிரபுவும் பெரிய மனுஷனுமாகிய ஒருவன் விழுந்தான்" என்று அழுதான் (3:38).*

*ஐந்தாவது, தாவீது ஒரு உண்மையான வருத்தத்தை செயல்விளக்கப் படுத்தினார். அவர் அழுதது மட்டுமின்றி, அவர் சவ அடக்க விருந்தில் கலந்து கொள்ளவும் மறுத்தார். தாவீது இராஜதந்திரத்துடன் துக்கமாயிருப்பதாக நடிக்கவில்லை என்பதை நான் வலியுறுத்த அனுமதியுங்கள். பெலிஸ்தரின் நாட்டில் தாவீது, நமது வஞ்சனைகள் விரைவிலோ அல்லது தாமதமாகவோ (வழக்கமாக விரைவிலேயே) நம்மைக் காட்டிக் கொடுத்துவிடும் என்பதை கண்டறிந்தார். கடைசியில், பின்பற்றாளர்கள் பாசாங்கைக் கண்டுபிடித்து விடுகின்றார்கள். தாவீதின் துயரம் உண்மையானதாக இருந்தபடியால், மக்கள் மனதில் அது பதிந்தது; பெரிய மனிதர் ஒருவர், காலத்திற்கு முந்தி மற்றும் கனமில்லாத வகையில் மரித்தது குறித்து அவர் இருதயம் உடைந்து போனார்.*

*தாவீதின் தீர்மானமான மற்றும் ஞானமிக்க செயல்களின் விளைவு என்னவாக இருந்தது? தாவீது செய்தது மக்களை பிரியப்படுத்தியது மற்றும் அப்னேரை மரணத்திற்கு உட்படுத்தியதில், தாவீதுக்குப் பங்கு எதுவும் இல்லை என்று மக்களை நம்பச் செய்தது.*

*ஒவ்வொரு நடத்துனருக்கும் தைரியமும் ஞானமும் தேவைப் படுகின்றது. கர்த்தருடன் நெருங்கி இருத்தல் மூலம் இவ்விரண்டையும் ஆதாயப்படுத்திக்கொள்ள இயலும் என்பதைத் தேவனுடைய நடத்துனர், அறிகின்றார். யோசுவா பின்வருமாறு கூறினார்:*

> *... நியாயப்பிரமாணத்தின்படியெல்லாம் செய்யக் கவனமாயிருக்க மாத்திரம் மிகவும் பலங்கொண்டு திடமனதாயிரு; நீ போகும் இடமெல்லாம் புத்திமானாய் நடந்துகொள்ளும்படிக்கு, அதை விட்டு வலது இடது புறம் விலகாதிருப்பாயாக ... பலங்கொண்டு திடமன*

*தாயிரு ... நீ போகும் இடமெல்லாம் உன் தேவனாகிய கர்த்தர் உன்னோடே இருக்கிறார் ... (யோசு. 1:7-9).*

*பழைய ஏற்பாட்டில் ஞானமிக்கவராயிருந்த மனிதர், தேவனுடைய சித்தத்தைக் கற்றறிந்து அதன்படி வாழ்வதினாலேயே ஞானம் வருகின்றது என்று கூறினார் (நீதி. 1:1, 2; 2:2 முதலியவற்றைக் காணவும்). "ஒருவன் ஞானத்தில் குறைவுள்ளவனானால், ... தேவனிடத்தில் கேட்கக்கடவன்" என்று யாக்கோபு கூறினார் (யாக். 1:5).*

*வேதாகம வாசிப்பு மற்றும் ஜெபம் ஆகியவற்றினால் நாம் தேவனுடைய நபர்த்தன்மை, நோக்கம் ஆகியவற்றை நமக்குள் அதிகமாய்ப் பெருக்கிக் கொள்வோமாக. அதன் பிறகு, துன்பம் வரும்பொழுது, நாம் தைரியத்துடன் செயல்பட முடியும்.*

## ஞானமுள்ள நடத்துனர்கள் தங்கள் பலவீனங்கள் பற்றி உண்மையுடன் இருக்கின்றார்கள் (2 சாமுவேல் 3:38, 39)

*தாவீது செய்த இன்னொரு காரியம் மக்களைப் பிரியப்படுத்தியது: அவர் தம் குறைகளை ஒப்புக்கொண்டார். 3:38, 39ஐக் கவனியுங்கள்: "ராஜா தம் ஊழியக்காரரை நோக்கி: ... 'நான் ராஜாவாக அபிஷேகம் பண்ணப் பட்டவனாயிருந்தபோதிலும், நான் இன்னும் பலவீனன்; செருயாவின் குமாரராகிய இந்த மனுஷர் [அதாவது, யோவாபும் அவர் சகோதரர்களும்] என் பலத்துக்கு மிஞ்சினவர்களாயிருக்கிறார்கள்'." அப்னேர் கொலை செய்யப்பட்டதில் தாவீது தமது சுய ஈடுபாடு இல்லை என்று மறுத்தாலும், ஒரு கருத்தில் அவர் தமக்குக் கீழ்ப்பட்டவர்களுக்குத் தாமே பொறுப்பாளி என்று அறிந்தார். தாவீது, "நான் இருக்க வேண்டிய பிரகாரமான பலம் வாய்ந்த நடத்துனராயிருந்திருந்தால், யோவாபும் அவரது உடன் சூழ்ச்சியாளர்களும் இதைச்செய்ய ஒருக்காலும் துணிந்திருக்க மாட்டார்கள்" என்று கூறினார்.*

*விஷயங்கள் தவறானபோது, பழிசுமத்த ஒரு ஆளைத் தேடாமல், குற்றத்தின் தங்கள் பங்கை (சில வேளைகளில் அதை விட அதிகமான பங்கை) சுமக்கின்ற நடத்துனர்களை நான் பாராட்டுகின்றேன் - இவர்கள் வெற்றியடையக் கூடிய விளையாட்டில் தோற்றுப் போன குழுவின் பயிற்சியாளராகவோ, கீழ்மட்டத்தில் உள்ளவர்களிடம் தவறான அமைவு காரணமாக அழிவு தரும் வகையில் செயல்படும் அரசியல் தலைவராகவோ அல்லது பிரச்சனைகள் கொண்ட சபையொன்றின் மூப்பராகவோ, யாராயிருப்பினும் இவர்களை நான் மதிக்கின்றேன். சட்டப்படி, தவறு நேர்கையில் எல்லாப் பொறுப்பையும் மறுக்கின்ற ஒருவரைக் காட்டிலும், ஒருவர் தமது தவறுகள் குறித்துக் கபடமில்லாமல் இருக்கிற வேளையில் அவருக்கே மக்கள் இரண்டாம் வாய்ப்பை நீட்டிக்க மனவிருப்பமாய் இருக்கின்றார்கள்.*

*தாவீது தமது வரையறைகளை ஒப்புக்கொண்டபோது, தம்மைப் பின்பற்றியவர்களிடம் மதிப்பை இழந்து போகவில்லை; மாறாக, அவர்களின் மதிப்பை அவர் ஆதாயப்படுத்திக் கொண்டார். தாவீது, 2 கொரிந்தியர் 12:9, 10ல் பவுல் எழுதிய ஆவிக்குரிய தன்மையை உள்ளீர்த்துக் கொண்டிருந்தார்:*

> *அதற்கு அவர் [தேவன்]: "என் கிருபை உனக்குப் போதும்; பலவீனத்திலே என் பலம் பூரணமாய் விளங்கும்" என்றார். ஆகையால், கிறிஸ்துவின் வல்லமை என்மேல் தங்கும்படி, என் பலவீனங்களைக் குறித்து நான் மிகவும் சந்தோஷமாய் மேன்மைபாராட்டுவேன். அந்தப்படி நான் பலவீனமாயிருக்கும்போதே பலமுள்ளவனாயிருக்கிறேன் ...*

*பாதுகாப்பாய் உணராத நடத்துனர் தாம் தமது குறைபாடுகளை ஒப்புக்கொள்ள முடியாதவராக இருப்பார். உண்மையான நடத்துனர்கள் தங்கள் பலவீனங்களை ஒப்புக்கொள்ளக்கூடிய அளவுக்குப் பலமுள்ளவர்களாக, தங்கள் குறைவுகளை ஒப்புக்கொள்ளக்கூடிய அளவுக்கு தன்னம்பிக்கை கொண்டவர்களாக, தங்கள் தவறுகளை அறிக்கையிடக் கூடிய அளவுக்குப் பெரியவர்களாக இருக்கின்றார்கள்.*

## *ஞானமுள்ள நடத்துனர்கள் தடங்கல்கள் வரும்போது கூடத் தன்னம்பிக்கையுடன் நிலைத்திருக்கின்றார்கள் (2 சாமுவேல் 4:1-5:5; 1 நாளாகமம் 11:1-3; 12:23-40)*

*அப்னேரின் கொலை என்ற பேரழிவை தாவீது தவிர்த்த உடனே, தொடுவானத்தில் மாபெரும் அழிவிற்கான பெரும் விபத்தொன்று வெளிச்சத்துடன் காணப்பட்டது. இஸ்போசேத்தின் படையில் இருந்த தளபதிகளான இரு சகோதரர்கள், அப்னேரின் மரணத்தைக் கேள்விப்பட்டு, தாவீதின் ஆதரவைப் பெறுவதற்காக பயங்கரமான திட்டம் ஒன்றை முடிவு செய்கின்றார்கள்.[28] அவர்கள், இஸ்போசேத் தமது வீட்டில் மத்தியானத்தில் படுத்திருக்கையில், ஒரு சிலர் மாத்திரம் வேலையில் ஈடுபட்டிருக்கையில்,[29] இஸ்போசேத்தின் வீட்டிற்குள் வந்தார்கள். அவர்கள் அரசரின் படுக்கையறைக்குள் தைரியமாய் நுழைந்து அவரைக் கொன்றார்கள். அவர்கள் அவரின் தலையை வெட்டியெடுத்துக் கொண்டு தாவீது இருக்கும் இடத்தை அடைவதற்காக இரவு முழுவதும் பயணப்பட்டார்கள்.*

*அவர்கள் தங்கள் கைகளில் இஸ்போசேத்தின் தலையுடன் தாவீதின் வாயிற்கதவண்டையில் வந்தபோது, இஸ்ரவேல் முழுவதற்கும் ராஜாவாகப் போகிறவர் குறித்து தாங்கள் தவறாக எடைபோட்டிருந்த விஷயத்தைக் கண்டறிந்தார்கள். மீண்டும் ஒருமுறை துரிதமான செயல்பாடு அவசிய*

மாயிற்று, இல்லையென்றால், தாவீது அரசியல் பலாத்காரத்தில் ஈடுபட்டார் என்று ஒரு செய்தி விரைவில் பரவத் தொடங்கிவிடும். சவுலைக் கொன்றதாக உரிமைகோரிய அமலேக்கியனுக்குத் தரப்பட்ட தண்டனையை தாவீது இந்த சகோதரர்களுக்கு நினைவூட்டினார். அவர், "தமது வீட்டிற்குள் தமது படுக்கையின்மேல் படுத்திருந்த நீதிமானைக்[30] கொலை செய்த பொல்லாத மனுஷருக்கு எவ்வளவு அதிகமாய் ஆக்கினை செய்யவேண்டும்? இப்போதும் நான் அவருடைய இரத்தப்பழியை உங்கள் கைகளில் வாங்கி, உங்களைப் பூமியிலிருந்து அழித்துப் போடாதிருப்பேனோ?" (2 சாமு. 4:11) என்று கூறினார்.

அவர் அவ்விரு மனிதர்களையும் கொலை செய்வித்தார், அவர்களின் கைகளையும் கால்களையும் வெட்டுவித்து, அவர்களின் உடல்களை ஒரு பொது இடத்தில் தொங்கவிட்டார். தாவீது ஒரு இரு மடங்கு செய்தியை அனுப்பிக் கொண்டிருந்தார்: (1) நீதிமொழிகள் 6:16-19ன் பொதுவான செய்தி. "குற்றமற்றவர்களுடைய இரத்தம் சிந்தும் கை" மற்றும் "தீங்கு செய்வதற்கு விரைந்தோடுங் கால்" ஆகியவற்றைக் கர்த்தர் வெறுக்கின்றார்; மற்றும் (2) தேவனால் அபிஷேகம் பண்ணப்பட்டவர் என்ற வகையில் அவர் பொய் மற்றும் வஞ்சனை ஆகியவற்றுக்கு உட்பட மாட்டார், வன்முறை யாளர்கள் விரைவான நீதி செலுத்தப்படுதலை அனுபவிப்பார்கள் என்ற திட்டவட்டமான செய்தி.

பின்பு, தாவீது, இஸ்போசேத்தின் தலையை அப்னேரின் கல்லறையில் அமைதியுடன் அடக்கம் செய்தார். இது சவுலின் அரச வம்சத்திற்கு கடைசி வணக்கமாக இருந்தது.

பேஸ்பால் விளையாட்டில் மாபெரும் புகழ்பெற்ற யோகி பெர்ரா என்பவர், "அது முடியும் வரை அது முடியாததாகவே உள்ளது" என்று கூறுவதை அடிக்கடி மேற்கோள் காண்பிப்பார் - இந்தக் கூற்று உண்மை என்பதை ஒவ்வொரு நடத்துனரும் அறிவார். நீங்கள் ஒரு பெருந்துன்பத்தை உங்கள் பின்வாயில் கதவு வழியே உதைத்து வெளியேற்றி விட்டு, உங்களையே பாராட்டிக்கொள்வதற்கு சற்றே நிற்கும் வேளையில், அதை விடப் பெரிய துன்பம் ஒன்று உங்கள் முன்வாயிற் கதவருகில் வந்து தட்டும். புகழ்பெற்ற "மர்பியின் சட்டம்" என்பது, "தவறாக முடிகிறதெல்லாம் தவறாகி விடும்" என்று எடுத்துரைக்கின்றது. மர்பி அவர்கள், நடத்துனர் களுக்கென்று ஒரு விசேஷித்த சட்டத்தைக் கொண்டிருந்தார்: "தவறாக முடிகிறதெல்லாம் - ஆயிரக்கணக்கில் பெருகி - தவறாகி விடும்."

ஆயினும், உண்மையான நடத்துனர்கள் நேர்மறையான எண்ணங் களுடன் நிலைத்திருக்கின்றார்கள். அவர்கள் நிறைவான வெற்றி குறித்துத் தன்னம்பிக்கை உடையவர்களாய் இருக்கின்றார்கள். இது தேவனுடைய நடத்துனர்களைப் பொறுத்தமட்டில் விசேஷித்த வகையில் உண்மையாக உள்ளது, இவர்கள் தேவன் தங்கள் பக்கம் இருப்பதை அறிகின்றார்கள் (ரோமர் 8:31).

தாவீது சாமுவேலினால் அபிஷேகம் பண்ணப்பட்டிருந்ததிலிருந்து, தாவீதின் வாழ்வில் கடந்த இருபது ஆண்டுகளாக ஒன்றன்பின் ஒன்றாக அறைகூவல் வந்துகொண்டேயிருந்தது! இருப்பினும் தாவீது வெளியேறி

விடவில்லை. தேவன் அவ்வகையான உண்மைத்தன்மைக்கு வெகுமதியளிக்கின்றார். அத்தியாயம் 5ன் முன் பகுதியில் நாம் இவ்வாறு வாசிக்கின்றோம்:

> அக்காலத்திலே இஸ்ரவேலின் கோத்திரங்களெல்லாம் எப்ரோனிலிருக்கிற தாவீதினிடத்தில் வந்து: "இதோ நாங்கள் உம்முடைய எலும்பும் உம்முடைய மாம்சமுமானவர்கள். சவுல் எங்கள்மேல் ராஜாவாயிருக்கும் போதே இஸ்ரவேலை நடத்திக்கொண்டு போனவரும் நடத்திக்கொண்டு வந்தவரும் நீரே; கர்த்தர்: 'என் ஜனமாகிய இஸ்ரவேலை நீ மேய்த்து, நீ இஸ்ரவேலின்மேல் தலைவனாயிருப்பாய்' என்று உம்மிடத்தில் சொன்னாரே" என்றார்கள். இஸ்ரவேலின் மூப்பர் எல்லாரும் எப்ரோனிலே ராஜாவினிடத்தில் வந்தார்கள்; தாவீதுராஜா எப்ரோனிலே கர்த்தருக்கு முன்பாக அவர்களோடே உடன்படிக்கை பண்ணினபின்பு, அவர்கள் தாவீதை இஸ்ரவேலின்மேல் ராஜாவாக அபிஷேகம் பண்ணினார்கள் (வ. 1-3).

இது தாவீது மூன்றாம் முறையாக அபிஷேகம் செய்விக்கப்பட்டதாக இருந்தது. 1 நாளாகமத்தை எழுதியவர், வடக்கு கோத்திரங்களில் இருந்து மூப்பர்களும் வீரர்களும் வந்தபொழுது அவர்கள், "கர்த்தருடைய வாக்கின்படியே, சவுலின் ராஜ்யபாரத்தைத் தாவீதினிடமாய்த் திருப்ப" (12:23) வந்தார்கள் என்று நமக்குக் கூறுகின்றார். "தாவீதை இஸ்ரவேலின் மேல் ராஜாவாக்குகிறதற்கு ... உத்தம இருதயத்தோடே எப்ரோனுக்கு வந்தார்கள்" (வ. 38). அங்கு வந்தவர்கள், சுமார் 3,40,000 பேர் கொண்ட ஒரு படையைப் பிரதிநிதித்துவப்படுத்தினார்கள்![31] அவர்கள் தங்களுடன், விருந்துக்கென்று உணவுப் பொருட்களைக் கொண்டு வந்தார்கள், அந்த விருந்து மூன்று நாட்கள் நடைபெற்றது. இது வரையில் நடைபெற்றவற்றிலேயே மிகப் பெரிய விருந்துகளில் ஒன்றாக இது இருந்திருக்க வேண்டும்! "இஸ்ரவேலிலே மகிழ்ச்சியுண்டாயிற்று!" (1 நாளா. 12:40).

கடைசியில் தாவீது கடந்த முப்பது ஆண்டுகள் காலமாகத் தாம் தயார் செய்விக்கப்பட்ட தமது வாழ்வின் பணியைச் செய்யத் தொடங்கத் தயாரானார்!

> தாவீது ராஜாவாகும்போது, முப்பது வயதாயிருந்தான்; அவன் நாற்பது வருஷம் ராஜ்யபாரம் பண்ணினான். அவன் எப்ரோனிலே யூதாவின்மேல் ஏழு வருஷமும் ஆறு மாதமும், எருசலேமிலே சமஸ்த இஸ்ரவேலின்மேலும் யூதாவின் மேலும் முப்பத்துமூன்று வருஷமும் ராஜ்யபாரம் பண்ணினான் (2 சாமு. 5:4, 5).

## ஞானமுள்ள நடத்துனர்கள் அவர்களுக்கு இருப்பது பதவியல்ல ஆனால் பொறுப்பு என்பதைப் புரிந்து கொள்கிறார்கள் (2 சாமுவேல் 5:6-10; 1 நாளாகமம் 11:4-9)

மீண்டுமாக, இது ஒரு கற்பனைக் கதையாக இருந்திருந்தால், "அதற்குப்

பின்பு அவர்கள் எல்லாரும் என்றென்றும் சந்தோஷமாயிருந்தார்கள்" என்று கூற இதுவே ஏற்ற வேளையாயிருந்திருக்கும். ஆயினும் இது கற்பனைக் கதையல்ல; இது உண்மையான வாழ்வாக உள்ளது மற்றும் உண்மையான வாழ்வு என்பது அவ்வளவு சீரானதாக இருப்பதில்லை. பன்னிரெண்டு கோத்திரங்களினாலும் தாவீது ராஜாவாக முடிசூட்டப்பட்டபோது, அவரது பணி அப்போதுதான் தொடங்கியிருந்தது. நீங்கள் ஒரு இலக்கை அடையும் ஒவ்வொரு வேளையிலும் பிரச்சனைகளின் புதிய வகைகள் ஒன்றை அடைகின்றீர்கள் என்று கூறப்படுவது உண்டு.

பெற்றுக்கொள்ளப்பட்ட ஒருமைப்பாட்டை நிலைப்படுத்துதல் என்பதுதான் தாவீது செய்ய வேண்டிய முதல் செயலாக இருந்தது. புதிதாய்ப் பிறந்த ஒருமைப்பாடானது புதிதாய்ப் பிறந்த குழந்தை போலவே தாக்குதலுக்கு உட்படக்கூடியதாக, ஒவ்வொரு பிணியினாலும் எளிதில் பாதிப்படையக் கூடியதாக, எப்பொழுதுமே மரணத்திலிருந்து சிறு தொலைவிலேயே இருக்கக் கூடியதாக உள்ளது. தாவீது தாமே கூடக் கற்பனை செய்து பார்க்க இயலாத அளவுக்கு தொலைவில் சென்றடையக் கூடிய தைரியமும் மதிநுட்பமும் வாய்ந்த திட்டமிட்ட நடவடிக்கை ஒன்றை முடிவுசெய்தார். அவர் எருசலேமைக் கைப்பற்றி, அதைத் தமது இராஜரீக நகராக, நாட்டின் தலைநகராக மற்றும் இஸ்ரவேலரின் ஆவிக்குரிய மைய இடமாக ஏற்படுத்த முடிவு செய்தார்.

எருசலேம் நகர், நாட்டின் மிக உயர்ந்த இடத்தில் கட்டப்பட்டிருந்த பழங்கால நகராயிருந்தது. அது ஏற்கனவே ஆபிரகாமின் காலத்தில் ஒரு இராஜரீக நகராயிருந்தது, அங்கு அப்போது மெல்கிசேதேக்கு ராஜாவாயிருந்தார்.[32] எருசலேமுக்கு அருகில் இருந்த, மோரியா மலையின் மீதுதான் ஆபிரகாம் தமது மகன் ஈசாக்கைப் பலிசெலுத்தச் சென்றிருந்தார். (கானான்) நாட்டிற்குள் யோசுவா அணிவகுத்து வந்தபோது, அவர் எருசலேம் நகரின் அரசனைக் கொன்றிருந்தார் (யோசு. 10:22-27), ஆனால் அவரால் அந்த நகரைக் கீழ்ப்படுத்த முடியாமல் போயிற்று (யோசு. 15:63). ஆண்டுகளினூடே இன்னும் மற்றவர்கள் அந்த நகரைக் கைப்பற்ற முயற்சி செய்தார்கள், ஆனால் அதில் தோல்வியடைந்தார்கள் (நியா. 1:21). மூன்று பக்கங்களில் ஆழமான பள்ளத்தாக்குகளினால் சூழப்பட்டிருந்த ஒரு மேடான இடத்தில் இருந்த எருசலேம் நகரானது நானூறு ஆண்டுகள் அளவாக, இஸ்ரவேலின் மையப்பகுதியில் உட்புக முடியாத கோட்டையாக கம்பீரமாய் நின்று கொண்டிருந்தது. எருசலேமைப் பிடிப்பதின் மூலம் தாவீது, ஒருமைப்பாட்டின் வல்லமையைச் செயல் விளக்கப்படுத்துவார்; இஸ்ரவேலர்கள் தனித்தனியே இருந்து செய்ய முடியாத ஒரு செயலை ஒன்றுகூடிச் சாதிப்பவர்களாய் இருப்பார்கள். மேலும், எருசலேம் நகரானது யூதா, பென்யமீன் கோத்திரங்களுக்கு நடுநிலையான இடமாயிருந்த காரணத்தினால், தாவீது தமது ஆளுகையில் பட்சபாதம் காண்பியாதிருப்பதை இதன் மூலம் சுட்டிக்காண்பிப்பார்.

எருசலேமைப் பிடித்தல் என்று கூறுவது அதைச் செய்தலை விடச் சுலபமானதாயிருந்தது. தாவீதும் அவர் படையும் அந்த நகரை நோக்கி அணிவகுத்துச் சென்றபோது, அதன் கோட்டையில் இருந்த எபூசியர்கள்[33]

அவமானச் சொற்களை அள்ளி வீசினார்கள். அவர்கள், "நீ இதற்குள் பிரவேசிப்பதில்லை, குருடரும் சப்பாணிகளும் [கூட] உன்னைத் தடுப்பார்கள்!" (2 சாமு. 5:6) என்று சத்தமிட்டார்கள். ஆயினும் எப்படியோ, தாவீது அந்த நகரின் பாதுகாப்பில் ஒரு பலவீனமான இடம் இருப்பதை அறிந்தார். நகரத்தின் மதில்களுக்கு வெளியே இருந்த ஒரு நீரூற்றில் இருந்து நகரின் மையத்தில் இருந்த கிணற்றுக்குத் தண்ணீரைக் கொண்டுபோக ஒரு தண்ணீர்க் குழாய் பூமிக்கு அடியில் அமைக்கப்பட்டிருந்தது. அந்தப் பாதாளக் குழாயின் வழியே ஊடுருவிச் சென்று ஆழமான கிணற்றிலிருந்து மேலே ஏறி (தாக்குதல் செய்ய) வருதல் என்பது ஒரு தற்கொலைக்குச் சமமான பணியாய் இருந்தது, எனவே தாவீது பின்வருமாறு அறிவித்தார்: "எபூசியரை முறிய அடிக்கிறதில் எவன் முந்தினவனாயிருக்கிறானோ, அவன் [எனது படையின்] தலைவனும் சேனாபதியுமாயிருப்பான்" (1 நாளா. 11:6). அந்தக் குளிர்ந்த நீரில் யோவாப் எவ்விதத் தயக்கமும் இன்றி உடனடியாகக் குதித்து, தமது மனிதர்களை அந்தப் பாதாளக் குழாயின் வாயின் இருளுக்குள் வழிநடத்திச் சென்றான். விரைவிலேயே எருசலேம் தாவீதின் படையினரின் கைகளுக்குள் வந்து சேர்ந்தது - மற்றும் தாவீதிடம் இருந்தவர்களில் அச்சமே இல்லாத படைவீரரும் தாவீதுக்கு மிகுந்த சங்கடத்தை ஏற்படுத்தியிருந்தவருமான யோவாப், தாவீதின் படைத் தளபதியாக மீண்டும் பதவியில் அமர்த்தப்பட்டார். (உங்கள் யோவாபுக் களை வெளியேற்றுவது என்பது மிகவும் கடினமான செயலாகும்!)

தாவீது உடனடியாக எருசலேமைத் தமது தலைநகராக்கி, அதன் எல்லைப் பகுதிகளை விரிவுபடுத்த தொடங்கினார்.[34] விரைவிலேயே அது "தாவீதின் நகரம்" என்று அறியப்பட்டது. நாட்கள் செல்லச் செல்ல, "தாவீது விருத்தியடைந்தான், சேனைகளின் தேவனாகிய கர்த்தர் அவனோடே கூட இருந்தார்" (2 சாமு. 5:10).

2 சாமுவேல் 5:11ல் உள்ள ஒரு குறிப்பானது தாவீதின் வெற்றியை அடிக்கோடிட்டுக் காண்பிக்கின்றது: "தீருவின் ராஜாவாகிய ஈராம் தாவீதினிடத்தில் ஸ்தானாபதிகளையும், கேதுருமரங்களையும், தச்சரையும், கல் தச்சரையும் அனுப்பினான்; அவர்கள் தாவீதுக்கு ஒரு வீட்டை [அதாவது, அரண்மனை யை]க் கட்டினார்கள்." தீரு என்பது இஸ்ரவேல் நாட்டின் நேர் வடக்கில் இருந்த பெனிக்கியாவில் முக்கியமான துறைமுக நகராயிருந்தது. ஈராமின் நன்கொடையானது தனிச்சிறப்பு வாய்ந்ததாக இருந்தது, ஏனெனில் அவர் தாம் தாவீதின் புதிய அந்தஸ்து நிலையை ஒப்புக் கொண்ட முதல் வெளிநாட்டு சக்தியாயிருந்தார்.

ஈராமின் பெருந்தன்மை தாவீதை மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்திற்று. "கர்த்தர் தன்னை இஸ்ரவேலின்மேல் ராஜாவாகத் திடப்படுத்தி, தம்முடைய ஜனமாகிய இஸ்ரவேலினிமித்தம் தன்னுடைய ராஜ்யத்தை உயர்த்தினார் என்று தாவீது கண்டறிந் [தார்]" (2 சாமு. 5:12). விசேஷித்த ஒரு விஷயம் உங்களுக்கு எப்போதாவது நடந்திருந்து, நீங்கள் "இது உண்மைதானா? [அல்லது] நான் [உறக்கத்தினின்று] விழித்தெழுந்து, இது உண்மையல்ல என்று காணப் போகின்றேனா?" என்று எப்போதாவது வியப்படைந்தது உண்டா? அதைப் போன்ற ஒன்றையே தாவீது அனுபவித்

*தார் என்பது உறுதி. தேவனுடைய வாக்குத்தத்தங்கள் நிறைவேற வந்திருந்தன என்பதை ஈராமின் செயல்பாடுகள் உறுதிப்படுத்தின.*

*ஈராமின் நற்சிந்தையானது தாவீதுக்கு ஒரு முக்கியமான சத்தியத்தையும் நினைவுக்குக் கொண்டு வந்தது: "கர்த்தர் ... தம்முடைய ஜனமாகிய இஸ்ரவேலினிமித்தம் தன்னுடைய ராஜ்யத்தை உயர்த்தினார் என்று தாவீது கண்டறிந் [தார்]." இதை உங்கள் சிந்தையில் அடிக்கோடிட்டுக் கொள்ளுங்கள்: தாவீதினிமித்தமல்ல ஆனால், "தம்முடைய ஜனமாகிய இல்ரவேலினிமித்தம்." ஏராளமானவர்கள், தங்கள் சித்தத்தை செயல்படுத்துவதும், தங்கள் விருப்பத்தை முற்றிலுமாய் செயலுக்குக் கொண்டு வருவதும், விஷயங்களைத் தங்கள் விருப்பத்தின்படி வளைத்து கொள்வதுமே நடத்துவத்தின் நோக்கங்கள் என்று நினைக்கின்றார்கள். தாவீது தமது சொந்தமான பணித்திட்டங்கள் எதையும் கொண்டிருந்ததில்லை, ஆனால் அவர் தெய்வீகப் பணித்திட்டம் ஒன்றைக் கொண்டிருந்தார். அவர் தேவனுடைய மக்களினிமித்தமாகவே ஒவ்வொரு செயலையும் செய்தார்.*

*நடத்துவத்துவம் என்பது ஒரு பதவியல்ல, ஆனால் அது ஒரு பொறுப்பு என்பதாக உள்ளது. தாவீது கொண்டிருந்த பொறுப்பை உணர்ந்து அறிதல் மிகவும் கடினமானதாக உள்ளது. அத்துடன் ஒப்பிடக் கூடியதாக இன்று நம்மிடையே எதுவும் இல்லை. தாவீது, மக்களின் அரசியல் மற்றும் பொருளாதார நலன்களின் மீது மட்டுமின்றி, மக்களின் ஆவிக்குரிய நலன் மீதும் அக்கறை செலுத்த வேண்டியவராய் இருந்தார். நமது ஜனாதிபதியின் பாரமான பொறுப்புக்களை நினைத்துப் பாருங்கள். கர்த்தருடைய சபையின் மூப்பர் ஒருவரின் மூழ்கடிக்கும் பொறுப்புகளை நினைத்துப் பாருங்கள் (எபி. 13:17). பின்பு, ஜனாதிபதியின் பொறுப்பையும் மூப்பரின் பொறுப்பையும் ஒரு சேர இணைத்து நினைத்துப் பாருங்கள், அந்த மூப்பர் உள்ள சபையில் பல இலட்சக்கணக்கான உறுப்பினர்கள் இருக்கின்றனர்! அது தாவீது எதிர்கொண்டிருந்த அறைகூவலைப் பற்றிய சில கருத்துக்களைத் தருவதாயிருக்கும்.*

*எல்லா நடத்துனர்களும், தங்களை சீராட்டிக் கொள்வதற்காக அல்ல, ஆனால் பிறருக்குப் பணிபுரிவதற்காகவே நடத்துவத்தின் தகுதி நிலையைத் தாங்கள் அடைந்துள்ளனர் என்பதை உணர்ந்தறிய வேண்டும். மிகவும் முக்கியமாக, எல்லா நடத்துனர்களும் தாங்கள் யாருக்குப் பணி புரிகின்றார்களோ, அவர்களின் ஒழுக்கம் மற்றும் ஆவிக்குரிய நலன் பற்றித் தாங்கள் பொறுப்புக் கொண்டுள்ளதை உணர்ந்து அறிய வேண்டும். துரதிர்ஷ்டவசமாக, இவர்களில் பெரும்பான்மையானோர் இதை உணர்ந்தறியாமல் உள்ளனர்.*

## *ஞானமுள்ள நடத்துனர்கள் தங்களைப் பின்பற்றுபவர்களின் பாதுகாப்பு பற்றி அக்கறையுள்ளவர்களாக இருக்கின்றார்கள் (2 சாமுவேல் 5:17-25; 1 நாளாகமம் 14:8-16)*

*அப்னேர் வடக்குக் கோத்திரங்களின் மூப்பர்களுடனான தமது முந்திய மாநாடொன்றில், "என் தாசனாகிய தாவீதின் கையினால், என் ஜனமாகிய இஸ்ரவேலைப் பெலிஸ்தரின் கைக்கும், அவர்களுடைய எல்லாச் சத்துருக்களின் கைக்கும் நீங்கலாக்கி இரட்சிப்பேன் என்று கர்த்தர் தாவீதைக் குறித்துச் சொல்லியிருக்கிறாரே'' (2 சாமு. 3:18) என்று கூறியிருந்தார்.[35] இந்த வாக்குத்தத்தம் குறித்து, புதிதாக முடிசூட்டப் பட்டிருந்த ராஜா விரைவிலேயே சோதிக்கப்பட வேண்டியிருந்தார். "தாவீதை இஸ்ரவேலின்மேல் ராஜாவாக அபிஷேகம் பண்ணினார்கள் என்று பெலிஸ்தர் கேள்விப்பட்டபோது, அவர்கள் எல்லாரும் தாவீதைத் தேடும்படி வந்தார்கள்" (2 சாமு. 5:17அ). நாடானது பிளவுபட்டும், தாவீது யூதாவின்மேல் மாத்திரம் ராஜாவாயிருந்த வரைக்கும் பெலிஸ்தர்கள் அவரால் அபாயம் என்று ஆலோசிக்கவில்லை. ஆயினும், தாவீதின் கீழ் இஸ்ரவேலர்கள் ஒன்றிணைந்து, அவர் 3,00,000 படை வீரர்களைத் தமது கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருந்த [இப்] பொழுது, தாவீது தமது பாதுகாப்புகளை ஒழுங்கு படுத்துவதற்கு முன்பு அவரை அழிக்கும்படி பெலிஸ்தர்கள் விரைந்தார்கள்.*

*இது ஒரு கொள்ளைக் கூட்டத்தின் சூரையாடுதலாக இருக்கவில்லை. இது முற்றிலும் ஒரு யுத்தமாக இருந்தது, இது சவுலை நசுக்கிச் சிதைத்த யுத்தம் போன்றதாகவே இருந்தது. "அவர்கள் [பெலிஸ்தர்கள்] எல்லாரும் தாவீதைத் தேடும்படி வந்தார்கள்'' என்பது வலியுறுத்தப்படுகின்றது.* NIV *யானது, "அவர்கள் தங்கள் முழுப் படைகளுடன் அவரைத் தேடிச் சென்றார்கள்" என்று கூறுகின்றது. அவர்கள் பெலிஸ்தியாவில் இருந்து அணிவகுத்துச் சென்று, எருசலேமிலிருந்து ஒரு சில மைல்கள் தூரத்தில் இருந்த ரெப்பாயீம் பள்ளத்தாக்கு வரையில் முன்னேறிச் செல்லுகையில், வழிநெடுகிலும் அவர்கள் களவும் கொலையும் செய்து கொண்டே சென்றார்கள்.[36]*

*கீழேயிருந்த பள்ளத்தாக்கில் விரோதிகள் எங்கும் பரவியிருந்ததைத் தாவீது கண்டபொழுது, அவர் இஸ்ரவேலின் உண்மையான அரசரிடம் சென்றார். அவர் கர்த்தரிடத்தில், ''பெலிஸ்தருக்கு விரோதமாய்ப் போகலாமா, ... என்று ... விசாரித்த போது, கர்த்தர், போ, பெலிஸ்தரை உன் கையில் நிச்சயமாய் ஒப்புக்கொடுப்பேன் என்று தாவீதுக்குச் சொன்னார்'' (2 சாமு. 5:19). பல ஆண்டுகளில் முதன் முறையாகக் கர்த்தருடைய சேனை போலக் காணப்பட்ட நிலையில், தாவீது தம் மனிதர்களை யுத்தத்தில் வழிநடத்திச் சென்றார், பெலிஸ்தர்களை முறிய அடித்தார். அவர், "தண்ணீர்கள் உடைந்தோடுகிறது போல [தண்ணீர் பெருக்கெடுத்து ஓடுவது போல;* RSV*] கர்த்தர் என் சத்துருக்களை எனக்கு முன்பாக உடைத்து ஓடப் பண்ணினார்'' (2 சாமு. 5:20) என்று அகம்*

மகிழ்ந்தார். அவர் அந்த இடத்திற்கு, "உடைந்தோடச் செய்குதலின் கர்த்தர்" என்று அர்த்தம் தருகின்ற பாகால் பிராசீம் என்று பெயரிட்டார்.

எந்த ஒரு நடத்துனருக்கும், நடத்துவத்திற்காகத் தம்மை நோக்கிப் பார்க்கின்ற மக்களைத் தற்காத்து, பாதுகாத்தல் என்பது மாபெரும் பொறுப்புகளில் ஒன்றாக உள்ளது. சில வேளைகளில் அழிவுக்குரிய தாக்குதல்கள் தெளிவாயுள்ளன; சில வேளைகளில் அவை தெளிவாய் இருப்பதில்லை. சில வேளைகளில் அவை வெளியிலிருந்து வருகின்றன; மிகவும் அடிக்கடி அவை உள்ளிருந்தே வருகின்றன (அப். 20:28-30ஐக் கவனிக்கவும்). ஞானமுள்ள நடத்துனர் அபாயத்தைக் குறித்தும், அதை ஞானமாய்க் கையாள வேண்டியதின் அவசியம் குறித்தும் கருத்துணர்வுள்ளவராக இருக்கின்றார். தாவீதைப்போன்ற ஞானமுள்ள நடத்துனர், கடினமான சூழ்நிலைகளைக் கையாள்வதில் உதவிக்காகவும் வழிநடத்துதலுக்காகவும் கர்த்தரிடம் அடிக்கடி செல்லுவார்.

ஞானமுள்ள நடத்துனர்கள், பொதுவாகப் பிரச்சனைகளைக் கையாளும் போது, அவைகள் ஒருபோதும் மீண்டும் தோன்றாதபடி, என்றென்றைக்குமாக மறைந்தொழிவதில்லை என்றும் அறிகின்றார்கள். பெலிஸ்தர்கள் விரைவிலேயே திரும்ப வந்தார்கள். தாவீதின் முதல் வெற்றியினால் அதிர்ச்சியடைந்த அவர்கள், இன்னும் பெரிய படையைக் குவித்துக் கொண்டு, ரெப்பாயீம் பள்ளத்தாக்கில் வந்து சேர்ந்தார்கள்.[37] தாவீது மீண்டும் கர்த்தரிடம் சென்றார். இந்த வேளையில் தேவன் தாவீதிடம், விரோதியின் பின்னால் சுற்றிச் சூழ்ந்து கொண்டு தேவனுடைய சைகைக்காகக் காத்திருக்கும்படி கூறினார். "முசுக்கட்டைச் செடிகளின் நுனிகளிலே [தேவ சேனையானது யுத்தத்திற்குச்] செல்லுகிற இரைச்சலை நீ கேட்கும்போது,[38] சீக்கிரமாய் எழும்பிப்போ; அப்பொழுது பெலிஸ்தரின் பாளையத்தை முறிய அடிக்க கர்த்தர் உன் முன்பாகப் புறப்பட்டிருப்பார் என்றார்" (2 சாமு. 5:24). மீண்டும் ஒருமுறை தாவீது தேவனுடைய கட்டளைக்குக் கீழ்ப்படிந்தார். இந்த வேளையில் தாவீதும் அவரது படையும் விரோதிகளை அவர்களின் சொந்த நாட்டிற்குள் துரத்தியடித்தார்கள். "பெலிஸ்தரின் இராணுவத்தைக் கிபியோன் துவக்கிக் காசேர் மட்டும் முறிய அடித்தார்கள்" (1 நாளா. 14:16). திட்டவட்டமான இந்த வெற்றியானது, பெலிஸ்தர்களின் ஆவியை முறியச்செய்தது. பெலிஸ்தர்கள் அவ்வப்போது இஸ்ரவேலுக்குத் துன்பம் தந்து கொண்டிருந்தாலும், இது அவர்கள் இஸ்ரவேலருக்கு தீவிரமான அச்சுறுத்தலாயிருந்ததை முடிவுக்குக் கொண்டு வந்தது.

இந்த இருபோராட்டங்களின் மிகச்சுருக்கமான விவரமானது (ஒன்பது வசனங்கள் மாத்திரம்), தாவீதின் வாழ்வில் நடைபெற்ற நூற்றுக்கணக்கான பிற யுத்தங்கள் போல இரண்டே இரண்டு யுத்தங்களைப் பற்றி அறிவிப்பதாகக் காணப்படுகிறது. ஆயினும் இஸ்ரவேலர்களுக்கு இந்த வெற்றிகள், தேவன் இப்பொழுது அவர்கள் தாவீதைத் தங்கள் ராஜாவாக ஏற்படுத்தியிருந்ததை அங்கீகரிப்பதற்கும், அவர் தம் ஆட்சியைத் தேவன் ஆசீர்வதிப்பார் என்பதற்கும் அடையாளமாயிருந்தன. இது (இராஜ்யத்தை) ஏற்படுத்துதலின் வரலாறாயிருந்தது. இது நடைபெற்று நூற்றுக்கணக்கான

*ஆண்டுளுக்குப் பின்பு, துன்மார்க்கருக்கு வரும் தேவ தண்டனையைப் பற்றிப் பேசிய ஏசாயா, பின்வருமாறு எழுதினார்:*

> *கர்த்தர் தமது கிரியையாகிய அபூர்வமான கிரியையைச் செய்யவும்,*
> *தமது வேலையாகிய அபூர்வமான வேலையை நிறைவேற்றவும்,*
> *அவர் பெராத்சீம் [அதாவது: பாகால் பிராசீம்] மலையிலே*
> *எழும்பினதுபோல எழும்பி,*
> *கிபியோனின் பள்ளத்தாக்கில் கோபங்கொண்டதுபோல*
> *கோபங்கொள்வார் (ஏசாயா 28:21).*

*1 நாளாகமம் 14:17 வசனம், இந்த வெற்றிகளின் விளைவைப் பற்றிக் கூறுகின்றது: "அப்படியே தாவீதின் கீர்த்தி சகல தேசங்களிலும் பிரசித்தமாகி, அவனுக்குப் பயப்படுகிற பயத்தைக் கர்த்தர் சகல ஜாதிகளின்மேலும் வரப்பண்ணினார்."*

*ஒவ்வொரு பிரச்சனையும் தீவிரமாக எடுத்துக்கொள்ளப்பட வேண்டும் என்று ஞானமுள்ள நடத்துனர்கள் அறிந்துள்ளனர். அறைகூவல்களை நாம் எவ்வாறு கையாளுகிறோம் என்பதன் விளைவுகள் எவ்வளவு தூரம் சென்றடையும் என்பதை நாம் ஒருக்காலும் அறிவதில்லை.*

## ஞானமுள்ள நடத்துனர்கள் தங்கள் துதியில் மட்டுமீறியவர்களாய் இருக்கின்றார்கள் *(2 சாமுவேல் 23:8-39; 1 நாளாகமம் 11:10-12:38)*

*தாவீது பெலிஸ்தர்களைத் தனியாகச் சந்திக்கவில்லை. அவர் தேவன் தம்முடன் தனிப்பட்ட வகையில் இருந்த காரணத்தினால் மட்டும் யுத்தங்களில் வெற்றி பெற்றதில்லை, ஆனால் கர்த்தர் அவரைச் சுற்றிலும், இதுவரை வாழ்ந்திருந்தவர்களிலேயே மிக வலிமைவாய்ந்த போராளி களைச் சூழச் செய்திருந்த காரணத்தினால் அவர் வெற்றி பெற்றிருந்தார். தாவீது இதை உணர்ந்து அறிந்தவராக, யார் யாருக்கு மதிப்பு அளிக்க வேண்டுமோ, அவர்களுக்கெல்லாம் மதிப்பளித்தார். 2 சாமுவேல் புத்தகத் தின் 23ம் அதிகாரத்தில், தாவீது தமது ஆட்சியை முடிக்கும் தருவாயில் இம்மனிதர்களில் பலர் ("தாவீதுக்கு இருந்த பராக்கிரமசாலிகள்" என்று அழைக்கப்பட்டவர்கள்; 2 சாமு. 23:8; 1 நாளா. 11:10) பட்டியலிடப் பட்டுள்ளனர். 1 நாளாகமம் புத்தகத்தின் 11 மற்றும் 12ம் அதிகாரங்களில் இவர்கள் தாவீதின் ஆட்சியின் தொடக்கத்தில் பட்டியலிடப்படுகின்றார் கள். 2 சாமுவேல் புத்தகம் முப்பத்தியேழு மனிதர்களை பட்டியலிடுகின்றது. இதை ஆழ்ந்து சிந்தியுங்கள்: இந்தப் பட்டியல் எங்கு தொடக்கம் பெற்றது? தாவீது ராஜா இவற்றைப் பதிவு செய்யும்படி ஏற்பாடு செய்தார். அவர், தமது மாபெரும் போர்வீரர்களின் மதிப்புமிகும் பட்டியலைக் கொண்டிருந் தார். அவர்கள் செய்திருந்தவற்றை அவர் பாராட்டினார், அவர்களைக் குறித்தும் அவர்களின் ஆச்சரியமான சாதனைகள் குறித்தும் எதிர்கால சந்ததியார் அறிய வேண்டும் என்று அவர் விரும்பினார்.*

*ஞானமுள்ள நடத்துனர்கள் - சபையிலோ, இல்லத்திலோ, அல்லது உள்ளூர் சேவைக் குழுமத்திலோ எந்த இடத்திலும் - அங்கீகரித்தல் எவருக்கு உரியதோ, அவருக்கு அங்கீகரித்தலைக் கொடுக்க வேண்டியதின் முக்கியத் துவத்தை அறிகின்றார்கள். நான் இங்கு உண்மையற்ற பாராட்டுதலை (மக்கள் வெறும் போலிப் புகழ்ச்சியினூடே கண்ணோக்க முடியும்) அர்த்தப்படுத்துவதில்லை; நான், ஒரு பணி நன்கு செய்து முடிக்கப்பட்டது என்பதை ஒப்புக் கொள்வதையே அர்த்தப்படுத்துகின்றேன். பவுல், "ஆகையால் யாவருக்கும் செலுத்த வேண்டிய கடமைகளைச் செலுத்துங் கள்; ... எவனைக் கனம்பண்ண வேண்டியதோ அவனைக் கனம் பண்ணுங் கள்" என்று கூறினார் (ரோமர் 13:7). ஞானமுள்ள நடத்துனர்கள் தங்களின் புகழுரைத்தல் மற்றும் பாராட்டுதல்களில் மட்டுமீறினவர்களாய் இருக்கின்றார்கள். ஞானமுள்ள நடத்துனர்கள் முதலில் தேவனுக்குரிய மதிப்பை அளிக்கின்றார்கள், பின்பு கடினமாக உழைத்தவர்களுக்கு மதிப்பளிக்கச் செல்லுகின்றார்கள். அவர்கள், "கனம்பண்ணுகிறதிலே ஒருவருக்கொருவர் முந்திக் கொள்ளுங்கள்" (ரோமர் 12:10) என்பதை அறிந்திருக்கின்றார்கள்.*

## *உண்மையான நடத்துனர்கள் குடும்பத்தின் முக்கியத்துவத்தைக் குறைக்காமல் இருக்கின்றார்கள் (2 சாமுவேல் 3:2-5, 12-16; 5:13-16; 1 நாளாகமம் 14:3-7)*

*இந்தப் பாடத்திற்குப் பயன்படுத்தப்பட்டுள்ள வேத வசனப்பகுதியில் தாவீதின் குடும்பம் பற்றித் தரப்பட்டுள்ள குறிப்புகளை நாம் காணாது விட்டுவிடக் கூடாது. 2 சாமுவேல் 2:2ல், தாவீதின் குடும்பம் அவருடன் வாழும்படிக்கு எப்ரோனுக்கு வந்தது என்று நமக்குக் கூறப்படுகின்றது. 2 சாமுவேல் 3:1-5ல், "தாவீது தொடர்ந்து பலத்து வளர்ந்தார்" என்று நமக்குக் கூறப்பட்ட பின்பு, அதற்கான ஆதாரம் நமக்கு தரப்படுகின்றது: "எப்ரோனிலே தாவீதுக்கு மகன்கள் பிறந்தார்கள்."[39] தாவீது தம் தலைநகரை எருசலேமுக்கு மாற்றியபோது, நமக்கு அவரது குடும்பத்தின் வளர்ச்சி பற்றி புதுப்பிக்கப்பட்ட தகவல் தரப்படுகின்றது: "இன்னும் அதிக குமாரரும் குமாரத்திகளும் தாவீதுக்குப் பிறந்தார்கள்" (இ.வ. 2 சாமு. 5:13; 1 நாளா. 14:3ஐயும் காணவும்)[40] தாவீதின் குடும்பம் இன்றியமையாதது என்று ஏவுதல் பெற்ற எழுத்தாளர் நினைத்தார் என்பது தெளிவு.*

*குடும்பங்கள் நடத்துனர்களை உருவாக்கவோ அல்லது அழிக்கவோ முடியும். நாம் காணப்போகிறபடி, பிற்பாடு தாவீது தமது குடும்பத்தைக் கவனிக்க முடியாத அளவுக்கு தம் பொறுப்புக்களினால் மூழ்கடிக்கப் பட்டிருந்தார் (1 இரா. 1:6ஐக் கவனிக்கவும்) - அதற்குரிய விலையை அவர் செலுத்தினார். ஞானமுள்ள நடத்துனர்கள் தங்கள் முன்னுரிமைகளைக் கண்ணோக்கும்போது, அவர்கள் தங்கள் குடும்பங்களை இலேசாக*

*நினைப்பதில்லை.*[41]

## ஞானமுள்ள நடத்துனர்கள் தங்கள் பின்பற்றாளர்களை ஈடுபடுத்துகின்றார்கள் (2 சாமுவேல் 6:1, 2; 1 நாளாகமம் 13:1-4)

*நமது அடுத்த பாடம் தாவீது (உடன்படிக்கைப்) பெட்டியை எருசலேமுக்குக் கொண்டு வரச் செய்த முயற்சிகளுடன் தொடங்கும். அந்த நிகழ்ச்சியில் நடத்துவத்தைப் பற்றி மேலும் இரண்டு உண்மைகள் காணப் பட முடியும். நாளாகமத்தின் எழுத்தாளர், தாவீது அந்த விஷயத்தை எவ்வளவு ஞானமாக அறிமுகப்படுத்தினார் என்று கூறினார்:*

> *தாவீது ஆயிரம்பேருக்குத் தலைவரோடும், நூறுபேருக்குத் தலைவரோடும் சகல அதிபதிகளோடும் ஆலோசனைபண்ணி, இஸ்ரவேல் சபையையெல்லாம் நோக்கி: "உங்களுக்குச் சம்மதியும் நம்முடைய தேவனாகிய கர்த்தருக்குச் சித்தமுமாயிருந்தால், இஸ்ரவேலின் தேசங்களிலெல்லாம் இருக்கிற நம்முடைய மற்ற சகோதரரும், அவர்களோடே தங்கள் வெளிநிலங்களில் இருக்கிற ஆசாரியரும் லேவியரும் நம்மோடே கூடும்படிக்கு நாம் சீக்கிரமாய் அவர்களிடத்துக்கு ஆள் அனுப்பி, நமது தேவனுடைய பெட்டியைத் திரும்ப நம்மிடத்துக்குக் கொண்டுவருவோமாக; சவுலின் நாட்களில் அதைத் தேடாதேபோனோம்" என்றான். இந்தக் காரியம் சகல ஜனத்தின் பார்வைக்கும் செம்மையாயிருந்தபடியால், சபையார் எல்லாரும் அப்படியே செய்வோம் என்றார்கள் (1 நாளா. 13:1-4).*

*"ஆலோசனைபண்ணி" மற்றும் "உங்களுக்குச் சம்மதியும் இருந்தால்" என்ற வார்த்தைகளைக் கவனிக்கவும்; பின்பு, "இந்தக் காரியம் சகல ஜனத்தின் பார்வைக்கும் செம்மையாயிருந்தபடியால், சபையார் எல்லாரும் அப்படியே செய்வோம் என்றார்கள்" என்ற பதில்செயலைக் கவனிக்கவும். ராஜா என்ற வகையில் தாவீது தமக்குப் பிரியமானபடியெல்லாம் செய்ய அதிகாரம் கொண்டிருந்தார். இருப்பினும், தேவனுடைய பெட்டியை எருச லேமுக்குக் கொண்டுவருதல் என்பது தாவீதுக்குத் தமது விருப்பத்தை மக்கள் மீது திணிக்கக்கூடாத அளவுக்கு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாயிருந் தது. அவர் அவர்களின் கருத்தைக் கேட்டார். இதை அவர் "ராஜாவின் திட்டம்" என்பதைக் காட்டிலும் மக்களின் திட்டம் என்பதாக ஏற்படுத் தினார். ஞானமுள்ள மனிதர்கள் கவனித்து கற்றுக் கொள்வார்களாக.*

## ஞானமுள்ள நடத்துனர்கள் ஆவிக்குரிய விஷயங்களுக்கு முதல் முன்னுரிமை அளிக்கின்றார்கள்

*1 நாளாகமம் 13:1-4ல், எருசலேமுக்குத் தேவனுடைய பெட்டியைக்*

கொண்டு வருதலில் வைக்கப்பட்ட முக்கியத்துவத்தைக் கவனியுங்கள். இது வரையிலும் தாவீது செய்திருந்த ஒவ்வொன்றும் ஒரு முடிவுக்கான வழி வகையாகவே இருந்தது: இஸ்ரவேல் மக்களை யெகோவா தேவனிடம் நெருங்கிய உறவுக்கு மீண்டும் திருப்பிக் கொண்டு வருதல் என்பதே அந்த முடிவாக இருந்தது. நாளாகம எழுத்தாளரின் குறிப்புப்படி, தேவனுடைய பெட்டியை எருசலேமுக்குக் கொண்டு வருதல் என்பதே தாவீது எருசலேமைத் தமது தலைநகராக்கிய பின்பு செய்த முதல் செயலாக இருந்தது.[42] ஞானமுள்ள நடத்துனர்கள் ஆவிக்குரிய விஷயங்களுக்கு முதல் முன்னுரிமை அளிக்கின்றார்கள்.

## முடிவுரை

தாவீது யூதா கோத்திரத்தினால் ராஜாவாக்கப்பட்ட பின்பு அவரது அற்புதமான தொடக்கம் பற்றி நீங்கள் அதிகமாய் ஈர்க்கப்பட்டிருப்பீர்கள் என்று நான் நம்பிக்கையாயிருக்கிறேன். நான் இந்த வசனங்களை வாசித்து, மறுபடியும் வாசித்துக் கொண்டிருக்கையில், “தேவனே, என்னை நீர் நடத்துவப் பதவி நிலையில் வைக்கும் பொழுதெல்லாம், தாவீது தமது ஆட்சியின் தொடக்க காலத்தில் காண்பித்த ஞானத்தை எனக்குத் தாரும்” என்பதே எனது ஜெபமாக இருந்தது.

இருப்பினும், நம்மில் பெரும்பான்மையானோர் பெரும்பாலும் பின்பற்றாளர்கள் என்ற தகுதி நிலையிலேயே இருப்பதினால், நல்ல நடத்துவத்தைப் போலவே நல்ல பின்பற்றாளர்த்துவமும்[43] இன்றியமையாதது என்பதை நான் வலியுறுத்தியாக வேண்டும். தேவனை மகிமைப்படுத்துகின்ற நடத்துனர்களைத் தேவன் நமக்குக் கொடுக்கும்படி நாம் ஜெபித்தல் அவசியமாகின்றது, மற்றும் ஏற்கனவே நாம் கொண்டுள்ள நடத்துனர்களுக்காக ஜெபிக்க வேண்டியதும் அவசியமாகின்றது.[44] பின்பு நாம், நமது நடத்துனர்களில் உள்ள மிகச் சிறந்த பண்புகளை வெளிக் கொண்டு வரும் வகையிலான பின்பற்றாளர்களாய் இருக்கத் தீர்மானம் செய்தல் அவசியமாகின்றது.[45]

“தேவனே, ஞானமுள்ள நடத்துனர்களை எங்களுக்குத் தாரும் - எங்களையும் உண்மை வாய்ந்த பின்பற்றாளர்களாக்கியருளும்!”

---

## பிரசங்கக் குறிப்புகள்

வேதாகம வரலாற்றுப் பாடங்கள் இரு வழிமுறைகளில் கையாளப்பட முடியும்: நீங்கள் அந்த வரலாற்றினூடே கடந்து செல்லுகையில் நடைமுறைப் பயன்பாடுகளை ஏற்படுத்த முடியும், அல்லது நீங்கள் முதலில் அந்த வரலாற்றைக் கூறிவிட்டுப் பிறகு நடைமுறைப் பயன்பாட்டை ஏற்படுத்த முடியும் இந்தப் பாடத்தொடரில் உள்ள பெரும்பான்மையான பாடங்கள் முதல் வகை அணுகுமுறையைக் கொண்டுள்ளன. ஒவ்வொரு பாடத்திலும் அளிக்கப்பட்டுள்ள பாடக்கருத்துக்கள் இவ்விரு அணுகு

*முறைகளுக்கும் ஏற்ற வகையில் தழுவியமைக்கப்பட முடியும். ஒரு பாடம் ''சரியானதென்று உணரப்பட'' வில்லை என்றால் இன்னொரு அணுகுமுறையில் முயற்சி செய்யவும்.*

*நடத்துவத்திற்கான ஒவ்வொரு பாடத்திற்கும், பின்பற்றாளர்த் துவத்திற்கான ஒரு பாடம் அவசியமாகின்றது. நல்ல பின்பற்றாளர்கள் குறித்து வேத வசனங்களின் இப்பகுதியில் இருந்து பல கருத்துக்களைக் கூற முடியும்.*

*யோவாப், அப்னேர் ஆகிய இருவருமே வசீகரிக்கத்தக்க தனிநபர்களாக உள்ளனர். இவ்விருவரில் எவரேனும் ஒருவரை வைத்தோ அல்லது இவ்விருவரையும் கொண்டுமோ, பயன்மிக்க பண்பு நலன் பாடங்களைப் பிரசங்கிக்க முடியும். ஒரு பாடத்தில் இவ்விரு மனிதர்களையும் வேறுபடுத்தி ஒப்பிடுதல் என்பது ஆர்வம் மிக்கதாக இருக்கும்.*

*சங்கீதம் 30, "கிரகப்பிரதிஷ்டையின் [இது அவரது அரண்மனையைக் குறிக்கலாம்] பாட்டாகிய தாவீதின் சங்கீதம்" என்று குறிப்பிடப்படுகின்றது; இந்தப் பாடத்தில், அரண்மனையைக் கட்டுதல் பற்றி குறிப்பிடப் பட்டுள்ளது. சிலர், தாவீது தாம் ராஜாவான முதல் நாட்களில் சங்கீதம் 27ஐ எழுதினார் என்று நினைக்கின்றார்கள். இந்த சங்கீதத்தின் வார்த்தைகள் இக்காலக்கட்டத்திற்குப் பொருந்துகின்றன. சகோதரத்துவ ஐக்கியத்தின் முக்கியத்துவம் பற்றிய சங்கீதமான சங்கீதம் 133ம், பிள்ளைகளை ஆசீர்வதித்தல் பற்றிய சங்கீதமான சங்கீதம் 127ம் இந்தப் பாடத்துடன் இயல்பாகப் பிணைக்கக் கூடியவைகளாக இருக்கின்றன.*

---

*குறிப்புகள்*

*[1]நி. ஊஜ¬ஷ்யியிஷ்ஸ்ரீ லுளயியிளஷெி, ம்ழிஸஷ், மிஜ¬ள றீஜ¬ளஸ்ரீ ஜ¬ளஷெி லுஷ்ஜஆ (நிழிஉலி, வீளமு: நிலிஷெி, 1986), 15. [2]இது தாவீது இரண்டாம் முறையாக அபிஷேகம் பெற்றவேளையாயிருந்தது. [3]பென்யமீன் கோத்திரத்தார் வெறும் அறுநூறு பேராகக் குறைக்கப்பட்ட போது, அவர்களின் நானூறு பேர் கீலேயாத் யாபேசின் கன்னிப்பெண்களில் இருந்து தங்களுக்கு மனைவிகளைத் தேர்ந்து கொண்டார்கள் (நியா. 21:8-14). மேலும், சவுலின் ஆட்சிக்காலத் தொடக்கத்தில், அம்மோனியர்கள் கீலேயாத் யாபேசின் குடிமக்களைத் தங்களுக்கு அடிமையாக்கி அவர்களின் வலது கண்களைப் பிடுங்கி விடப்போவதாகப் பயமுறுத்திய வேளையில், அவர்களின் கைகளினின்று இவர்களை அவர் (சவுல்) விடுவித்தார் (1 சாமு. 11:1-11). [4]அவர்களைப் புதைப்பதற்கு முன்பாக, இவர்கள் அவர்களின் உடல்களை எரித்தார்கள் (1 சாமு. 31:12). உடல்கள் முற்றிலுமாக எரியூட்டப்படவில்லை; பிற்பாடு, அவர்களின் எலும்புகளைத் தாவீது எடுத்துச் சென்றார் (2 சாமு. 21:12-14). இதை அவர்கள் சுகாதார காரணங்களுக்காகவோ அல்லது உள்ளூர்ப் பழக்க வழக்கத்தின்படியோ செய்திருக்கலாம்; இது யூதர்களின் பழக்க வழக்கமா யிருந்ததில்லை. [5]தாவீது மேவிபோசேத்தை நடத்திய விதத்தில் அவர் யோனத்தானுக்கு அளித்த வாக்குறுதி நிறைவேற்றப்பட்டது என்பதைக் கவனிக்கவும். [6]சங்கீதம் 133:1ஐக் கவனிக்கவும். ஒருமைப்பாடு என்பதே எல்லாவற்றையும் காட்டிலும் முக்கியமானது என்பதல்ல,*

ஆனால் ஒருமைப்பாடு என்பது முக்கிய மானதாக உள்ளது. தூய்மையும் உண்மைத் தன்மையும் ஒருமைப்பாட்டைக் காட்டிலும் முக்கியமானவைகளாக உள்ளன (யாக். 3:17அ; மத். 10:34), ஆனால் ஒருமைப்பாடு என்பது இந்த இலக்குகளுக்கு மிகவும் அண்மையில் உள்ளது. [7]தாவீது தமது சொந்தத் தளபதியான யோவாபைப் பாராட்டியதைக் காட்டிலும் அதிகமாக அப்னேரைப் பாராட்டினார். [8]2 சாமுவேல் 3:9, 10, 18ஐக் கவனிக்கவும். தாவீது இருமுறை சவுலின் உயிரைத் தப்பவிட்ட போதும் மற்றும் அவ்வேளையில் சவுல், தாவீது தான் அடுத்த ராஜாவாவார் என்று ஒப்புக் கொண்ட வேளையில் அப்னேர் அங்கு இருந்தார் (1 சாமு. 24; 26). [9]அப்னேர் சவுலுக்கு ஒன்றுவிட்ட சகோதரனாகவோ அல்லது சிற்றப்பா வாகவோ இருந்தார் (1 சாமு. 14:50, 51). (சிறிய தகப்பனின் மகன் என்று குறிப்பிடப் பட்டுள்ளதால், இவர் ஒன்றுவிட்ட சகோதரனாகவே இருந்தார்.) [10]2 சாமுவேல் 2:13ல் தான் யோவாப் தாவீதின் படைத்தலைவர் என்று முதன் முதலாகக் குறிப்பிடப்பட்டார்.

[11]சவுலின் முகாமிற்குள் செல்லத் தாவீதுக்குத் துணையாக அபிசாய் வந்தார்; அவர் (அபிசாய்) சவுலைக் கொல்ல விரும்பினார். [12]இவர்கள் தாவீதின் சகோதரியான செருயாளின் மகன்களாயிருந்தார்கள். [13]யோவாப் 20 மனிதர்களை மட்டும் இழந்தார், ஆனால் அப்னேர் 360 பேரை இழந்து போனார் (2 சாமு. 2:31ஐக் காணவும்). [14]NEB யில் இதைக் கவனிக்கவும்: ‘‘அப்னேர் தமது ஈட்டியின் பின்புறத்தினால் அவனது வயிற்றில் குத்தினார்’’ (2 சாமு. 2:23). அப்னேர் தமது ஈட்டியைத் தரையில் ஊன்றிய வேளையில் ஆசகேல் வேகமாய் ஓடிவந்து அதன் மீது விழுந்ததினால் அந்த ஈட்டி அவரது வயிற்றில் பாய்ந்து ஊடுருவி முதுகுப் பக்கமாய் வெளியேறியிருக்க வாய்ப்பு உள்ளது. [15]2 சாமுவேலில் உள்ள சில நிகழ்ச்சிகள் நாள்வரிசை முறைப்படி அமைக்கப் படுவதற்குப் பதிலாக தலைப்பு ரீதியாக அமைக்கப்பட்டுள்ளன, எனவே இந்த நிகழ்ச்சிகள் நடைபெற்ற வரிசை முறைமையை மிகச் சரியாகக் கூறுவது இயலாததாக உள்ளது. இஸ்போசேத் இரு ஆண்டுகள் மாத்திரம் அரசாட்சி செய்து, தாவீது சமஸ்த இஸ்ரவேலுக்கும் அரசராகும் முன்பே இறந்து போனதால், அவரது ஆளுகைக் காலமானது அநேகமாகத் தாவீது யூதாவின் மீது அரசாண்ட கடைசி இரண்டு ஆண்டு காலத்திற்கிணையாக (அதே காலமாக) இருக்கலாம். [16]கீலேயாத்தின் இந்த நகரானது எப்ரோனில் இருந்து சுமார் ஐம்பது மைல்கள் தொலைவில் யோர்தான் நதிக்கு அப்புறத்தில் இருந்தது. [17]இஸ்போசேத் என்பது “வெட்கக் கேட்டின் மகன்” என்று நேரடியாக அர்த்தம் கொண்டிருந்தது. இது அவருக்குத் தரப்பட்டிருந்த அவமானப்படுத்தும் பட்டப் பெயராக இருந்திருக்கலாம் அல்லது ஒருவேளை வேதபாரகர்கள் பாகால் என்ற புறஜாதி தெய்வத்தின் மீது தாங்கள் கொண்டிருந்த வெறுப்புணர்வு காரணமாக பிற்காலத்தில் “பாகால்” என்பதை “வெட்கம்” என்று மாற்றியிருக்கலாம். [18]1 நாளாகமம் 8:33. “எஸ்பால்” என்றால் “பாகாலின் மனிதன்” என்று அர்த்தப் படுகின்றது, இது “கர்த்தரின் மகன்” என்று அர்த்தப்படக் கூடும். “கர்த்தர்” என்பது பெரும்பாலும் யெகோவாவைக் குறிக்கலாம். [19]இஸ்போசேத், 1 நாளாகமம் 8:33ல் கடைசியாகப் பட்டியலிடப்பட்டுள்ளார். 2 சாமுவேல் 21:8ல் சவுலுக்கு கூடுதலாக இரு மகன்கள் இருந்ததாகக் கூறப்படுகிறது. அவர்கள் இவரைக் காட்டிலும் இளையவர்களாயிருந்தார்கள் என்று நான் யூகிக்கின்றேன். [20]அப்னேர் குற்றவாளியா அல்லவா என்று எபிரெய வசனப்பகுதி கூறுவதில்லை. சில மொழிபெயர்ப்புகள் செப்துவஜிந்த் வேதாகமத்தைப் பின்பற்றுகின்றன, அதில் வசனம் 7ல், ‘‘அப்னேர் அவளை எடுத்துக் கொண்டான்’’ என்று கூடுதலாகக் கூறப்படுகின்றது.

[21]தாவீது ஒரே ஒரு நிபந்தனை - அதுவும் - வினோதமான நிபந்தனையைக் கொண்டிருந்தார், அதாவது தமது மனைவி மீகாளைத் தம்மிடத்தில் திரும்பக் கூட்டி

வர வேண்டும் என்று அவர் கூறினார். [22]ஒருவேளை, தாவீதின் மகனாகிய சாலொமோன் நீதிமொழிகள் 25:21ஐ எழுதிய போது இந்த நிகழ்ச்சியை மனதில் கொண்டிருந்திருக்கலாம். [23]அப்னேரைக் கொன்றதில் அபிசாயிக்கும் பங்கு இருந்தது (2 சாமு. 3:30). [24]அப்னேரைக் கொல்வதற்கு யோவாபுக்குப் பல நோக்கங்கள் இருந்திருக்கச் சாத்தியக்கூறு உண்டு. ஆயினும் 2 சாமுவேல் 3:27, 30ன் படி, பழிவாங்குதல் என்பதே யோவாபின் அடிப்படை நோக்கமாக இருந்தது. [25]இது எருசலேமைப் பிடிக்கும்படி தாவீது சென்றபோது, தளபதிப் பதவி காலியாயிருந்த உண்மையினால் மறைமுகமாக உணர்த்தப்படுகின்றது (1 நாளா. 11:6). [26]யோவாபுக்குக் கடைசியில் மரணதண்டனை விதிக்கப்பட்டது என்பது கவனிக்கப்பட வேண்டும். அப்னேரைக் கொன்றது என்பது அவர் குற்றங்களில் ஒன்று என்று குறிப்பிடப்பட்டது (1 இரா. 2:28-34). [27]இரட்டுப்பு என்பது துக்கம் அல்லது மனந்திரும்புதலின் அடையாளமாக உடுத்தப்படும் ஒரு முரட்டு உடையாகும். [28]அவர்களின் செயலில் பழிவாங்குதலும் உள்ளடங்கியிருந்திருக்கும். பிற்பாடு (2 சாமு. 21:2ல்) சவுல் கிபியோனியரை வெட்ட வகை தேடினார் என்று நமக்குக் கூறப்படுகின்றது. இந்த சகோதரர்கள் பென்யமீன் கோத்திரத்தாருக்கு தரப் பட்டிருந்த பெயெரோத் என்ற கிபியோனிய நகரில் இருந்து வந்திருந்தார்கள் (யோசு. 9:17; 18:25). [29]செப்துவஜிந்தைப் பின்பற்றி, யூரீயானது, 2 சாமுவேல் 4:6ஐப் பின்வருமாறு மொழிபெயர்க்கிறது: “இதோ, அந்த வீட்டின் வாயிற்காப்பவள் கோதுமையைச் சுத்தம் செய்து கொண்டிருந்தாள், ஆனால் அவள் தூக்கமயக்கத்தில் உறங்கத் தொடங்கினாள்; எனவே ரேகாபும் அவன் சகோதரன் பானாவும் உள்ளே இரகசியமாய் நழுவிச் சென்றார்கள்.'' [30]இஸ்போசேத்து ஒரு பலவீனமான மனிதனாயிருந்தும் கூட, தாவீது அவனை அடிப்படையில் நல்லவன் என்றே நினைத்தார்.

[31]வேத பாடப்பகுதி, எப்ரோனுக்கு 3,40,000 பேர்களும் வந்திருந்தார்கள் என்பதுபோல் உள்ளது, மற்றும் அவர்கள் வராதிருந்தார்கள் என்று நம்புவதற்கு எந்தக் காரணமும் இல்லை. இருப்பினும் அந்தக்குழுவினரின் பிரதிநிதிகள் (மட்டும்) வந்திருக்கக் கூடிய சாத்தியமும் உள்ளது. எவ்வகையிலும் மிகப்பெரும் கூட்டம் கூடியது! [32]ஆதியாகமம் 14:18 முதல். “சாலேம்” என்பது “எருசலேம்” என்பதன் சுருக்கச் சொல் ஆகும் (சங். 76:2ஐக் கவனிக்கவும்). [33]சில வேளைகளில் எருசலேம், ‘‘எபூஸ்’’ என்று அழைக்கப்பட்டது (நியா. 19:10; 1 நாளா. 11:4). [34]தாவீது எருசலேமைப் பிடிக்கும்போது, அது எட்டு அல்லது பத்து ஏக்கர் பரப்பளவுதான் இருந்தது. “மில்லோ” என்ற வார்த்தையைக் கவனிக்கவும் (2 சாமு. 5:9); இது “நிரப்ப” என்று அர்த்தம் தரும் எபிரெய வார்த்தை ஒன்றில் இருந்து தரவழைக்கப்பட்டுள்ளது. ஒரு நிலம் அல்லது கற்குவியலானது மேலும் விரிவாக்கத்திற்கு அனுமதிக்கப்பட்ட நிலையைக் குறிப்பிடலாம். NIV இந்த வார்த்தையை “தாங்கும் மாடிகள்” என்று மொழிபெயர்க்கின்றது. [35]நாம் அறிந்த வரையில், இந்த வார்த்தைகள் தாவீதைப் பற்றியல்ல, ஆனால் சவுலைப் பற்றியே பேசப்பட்டன (இ.வ. 1 சாமு. 9:16). ஆயினும், சவுல் அந்த ஊழியத்தை நிறைவேற்றாததினால், இவைகள் தேவன் சவுலுக்கு மாற்றாகத் தேர்ந்து கொண்ட மனிதருக்கு பொருந்துவதாயிருந்தன. [36]1 நாளாகமம் 14:9, பெலிஸ்தியர்கள் பள்ளத்தாக்கில் கொள்ளையிட்டதாகக் கூறுகின்றது. [37]அவர்கள் பிற அரசர்களிடம் உதவி நாடிப் பெற்ற போது, அவர்களின் இரண்டாவது சேனையானது முதல் சேனையை விட மூன்று மடங்கு பெரியதாக இருந்ததாக யோசிப்பஸ் என்பவர் கூறினார். [38]காற்றில்லாதிருந்தபோதும் இலைகள் அசைந்து இரைச்சலிட்டன என்று யோசிப்பஸ் கூறினார். [39]தாவீது எப்ரோனில் வாழ்ந்தபோது இன்னும் நான்கு பெண்களை மணந்து கொண்டார் என்றும் நமக்கு மறைமுகமாகக் கூறப்படுகின்றது. [40]“தாவீது எருசலேமில் இன்னும் பல பெண்களை

*மனைவிகளாகவும் மறுமனை யாட்டிகளாகவும் சேர்த்துக் கொண்டார்" என்றும் நமக்குக் கூறப்படுகின்றது. எழுத்தாளர், உபாகமம் 17:17க்கு நேரெதிரிடையாயிருந்த தாவீதின் பலதார திருமணப் பழக்கத்தை நேரடியாக விமர்சனம் செய்வதில்லை, ஆனால் (தாவீதின்) வரலாறு படிப்படியாகக் கூறப்படுகையில், பேரழிவுமிக்க விளைவுகள் தாங்களாகவே எடுத்துரைக்கின்றன.*

*[41]புறக்கணிக்கப்பட்ட உறவுமுறையானது அன்பை அழித்துப்போடும் என்பதை வலியுறுத்துவதற்கு இவ்விடத்தில் மீகாள்-தாவீதின் வரலாறு இடைச் செருகப் படலாம். [42]1 நாளாகமம் 13:1 வசனமானது செயலில் 1 நாளாகமம் 11:1-9ஐத் தொடருகின்றது; இடைப்பட்ட வசனங்கள் "தாவீதின் பராக்கிரமசாலிகளான மனிதர்கள்" பற்றி எடுத்துரைக்கின்றது. 1 நாளாகமத்தின்படி, தாவீதை ஈராம் அங்கீகரித்தது, பெலிஸ்தர்களுக்கெதிரான தாவீதின் யுத்தங்கள், மற்றும் பிற நிகழ்ச்சிகள் யாவும், தாவீது முதன்முறை உடன்படிக்கைப் பெட்டியை எருசலேமுக்குக் கொண்டு வர முயற்சி செய்த வேளைக்கும் (1 நாளா. 13), உடன்படிக்கைப் பெட்டியை கொண்டு வருவதில் அவர் வெற்றியடைந்த வேளைக்கும் (1 நாளா. 15) இடையில் நடைபெற்றன என்றாகின்றது. இதுவே சரியான வரிசை அமைவு என்று நான் நம்புகின்றேன். [43]"பின்பற்றாளர்த்துவம்" என்பது இன்னும் மிகச் சரியானதாக உள்ளது, ஆனால் நான் "பின்பற்றுவத்துவம்" என்பதையே அதிகம் விரும்பித் தேர்ந்து கொள்கின்றேன். [44]அவர்கள் அரசாங்கத்தில் (1 தீமோ. 2:1, 2), சபையில் (எபி. 13:17, 18) அல்லது இல்லத்தில் என்று எங்கிருந்தாலும் நாம் அவர்களுக்காக ஜெபிப்பது அவசிய மாகின்றது. [45]அரசு (ரோமர் 13:1 முதல்), சபை (எபி. 13:17) அல்லது இல்லம் (இ.வ. எபே. 5:22; 6:1-3) எங்கிருப்பினும் நாம் கீழ்ப்படிதலும் ஆதரிக்கும் எண்ணப்போக்கும் உள்ளவர்களாயிருக்க வேண்டும்.*